Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 30 (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்:358

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
❖பல் கட்டுவதற்கும்,
❖பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
❖இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணா டிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-1476)



கேணல் சங்கர், மற்றும் தியாகி திலீபன் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சுடரேற்றி அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## வவுனியா காட்டுப் பகுதியில் இளைஞனின் சடலம் மீட்பு!

(வவுனியா)

வவுனியா. ஐயன்குளம் காட்டுப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்த இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விறகு பொறுக்கச் சென்ற பொதுமக்களால் கொடுக்கப்பட்ட தகவலையடுத்து, வவுனியா பொலிஸார் இந்தச் சடலத்தினை மீட்டுள்ளனர். இறந்தவரின் சடலத்தில் தலை, நெஞ்சுப்பகுதி, இடதுகை என்பனவே உள்ளதெனவும், எரிந்து உருக்குலைந்த நிலையில் காணப்படும் இந்த சடலத்திற்கருகில் துப்பாக்கி ரவைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## நெல் கொள்வனவாளர்களுக்கான வருவாய்த்துறையின் நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)

நெல் வாணிபஞ் செய்வோர், வன்னியிலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வது தொடர்பாக, சில நடைமுறைகளை நிதித்துறையின் வருவாய்ப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

வருவாய்ப் பகுதியின் தொழிற்பதிவுச் சான்றிதழைக் கொள்வனவு செய்பவர் பெற்றிருத்தல் வேண்டும். நெல்லைக் கொள்வனவு செய்யும்போது, கொள்வனவு சிட்டை வழங்குதல் வேண்டும். ஒரு கிலோ நெல்லினை பதினொரு ரூபா ஐம்பது சதத்திற்குக் குறையாமல் கொள்வனவு செய்யவேண்டும். (10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை ஜெனரல் ரெலவ்சன் இன்று சந்திப்பார்!

### விண்ணாணம் விநாசியர்



ரணிலுக்கு பாராட்டுக்குக் குறைவல்லை. ஆனால் இங்க ஒன்டுமில்லை.

## தொடர்புகளை வலுப்படுத்துவதே முக்கிய நோக்கம்

(கிளிநொச்சி)

**விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்குமான முக்கிய சந்திப்பொன்று இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.**

கிளிநொச்சியில் அமைந்துள்ள சமாதான செயலகத்தில் முற்பகல் பத்து மணிக்கு இந்தச் சந்திப்பு இடம் பெறும். விடுதலைப் புலிகள் சார்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், மட்டு.அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியந்துறைப் பொறுப்பாளர் பாவா ஆகிய மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்களும் விடுதலைப் புலிகளால்நியமிக்கப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பொங்குதமிழ் நிகழ்வு அடுத்த மாதம் நடைபெறவுள்ளது

(வவுனியா)

'நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்ல இராணுவமே உங்கள் வீடுகளுக்கு செல்லுங்கள்' என்ற தொனிப் பொருளில் அடுத்தமாதம் 15 ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டரங்கில் பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நேற்று மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற பொது அமைப்புக் களுடனான கூட்டத்தில் இந்த முடிவு (10 ஆம் பக்கம் பார்க்க)

ஆனால் இங்க ஒன்டுமில்லை.

# தொடர்புகளை வலுப்படுத்துவதே முக்கிய நோக்கம்

(கிளிநொச்சி)

**விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்குமான முக்கிய சந்திப்பொன்று இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.**

கிளிநொச்சியில் அமைந்துள்ள சமாதான செயலகத்தில் முற்பகல் பத்து மணிக்கு இந்தச் சந்திப்பு இடம் பெறும். விடுதலைப் புலிகள் சார்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில், யாழ்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், மட்டு.அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா ஆகிய மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்களும் விடுதலைப் புலிகளால்நியமிக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் பொங்குதமிழ் நிகழ்வு அடுத்த மாதம் நடைபெறவுள்ளது

(வவுனியா)

'நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்ல இராணுவமே உங்கள் வீடுகளுக்கு செல்லுங்கள்' என்ற தொனிப் பொருளில் அடுத்தமாதம் 15 ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டரங்கில் பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நேற்று மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற பொது அமைப்புக்களுடனான கூட்டத்தில் இந்த முடிவு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்பு குழு தலைவர் திருமலைக்கு நேற்று விஜயம்!

(திருகோணமலை)

இலங்கை போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் தலைவர் ட்ரைக் கேவ் ரெலவ்சன் நேற்றுத் திருகோண மலைக்கு விஜயமொன்றை மேற் கொண்டார்.

திருமலை சென்ற இவர், அங்குள்ள கண்காணிப்புக்குழுவின் அதிகாரிகளைச் சந்தித்து விடுதலைப் புலிகளின் குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

இவரது நேற்றைய திருமலை விஜயத்தின் போது, தான் கேட்டறிந்த விடயங்களை இன்று கிளிநொச்சியில் நடைபெறும் விடுதலைப் புலிகளுடனான சந்திப்பில் முன் வைப்பாரெனத் தெரியவருகிறது.

(04)

# இலங்கையின் சமாதான முயற்சிக்கு ஐ.நா.செயலாளர் அனான் பாராட்டு

(கொழும்பு)

சமாதான முயற்சியினை முன்னெடுத்துச் செல்லப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முழு ஈடுபாட்டுடன் நடவடிக்கை எடுத்துவருவதை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபி அனான் பாராட்டியுள்ளார்.

சவால்களுக்கு மத்தியிலும் சமாதான முயற்சிகளை அரசாங்கம் நுட்பமான முறையில் கொண்டு செல்வதாக கோபி அனான் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க்கில் சந்தித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சரித்திரத்தில் என்றுமில்லாதவாறு இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒத்துழைப்புடனும், இணக்கப்பாட்டுடனும் செயல்படுவதாகவும் கோபி அனான் குறிப்பிட்டார்.

சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தையும், அது தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றியும் ஆராயவும் ஐ.நா.செயலாளர் நாயகம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இலங்கை வரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# சுத்திகரிப்பில் ஈடுபட்டிருந்த வேளை ஏற்பட்ட விபத்தில் ஊழியர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கழிவுநீர் குழாய் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் உயிரிழந்தார். இருவர் மயகக் மடைந்த நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த ஜீவியம் அற்புதன் (வயது 19) என்ற இளைஞனே உயிரிழந்தார். இதே இடத்தைச் சேர்ந்தவர்களான ம. மெண்டிஸ் சுமன் (வயது 19), செபமாலை ரவி (வயது 28) ஆகிய இருவரும் மயக்கமடைந்தனர்.

இந்தச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது - கடந்த சில வாரங்களாக சுகாதார ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் வைத்தியசாலை கழிவுநீர்தொட்டிகள் நிரம்பித் குழாய்கள் தடைப்பட்டிருந்தன. அதனை அகற்றுவதற்காக ஒப்பந்த அடிப்படையில் அண்மையில் நியமிக்கப்பட்ட, மேற்படி பாதிக்கப்பட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)


நமது ஈழநாடு

முதலாம் ஆண்டுச்சிறப்பிதழ்

வரும் புதன்கிழமை

நாற்பதுக்கும் அதிக பக்கங்களுடன்

வண்ணமலராய்

வெளிவருகின்றது

விலை ரூ. 10 மட்டுமே

உங்கள் பிரதிக்கு இன்றே பதிவு செய்யுங்கள்



EXPOAIR your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226497

0712348888 0712349999 074512666 012360290 012360291

email . jaffna @ expoavi . com.

எக்ஸ்போஎயார் வான் வெளியில் உங்கள் தோழன்...

(சி -1423)

# தென்மராட்சி உயர்பாதுகாப்பு வலய பிரதேசத்தில் பெருமளவு தென்னைகள் படையினரால் அழிப்பு!

(ஆழியவளை)

தென்மராட்சி உயர்பாதுகாப்புப் பகுதிகளில் பெருமளவு தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக அப் பகுதிக்குச் சென்ற தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சியில் சிறிலங்காப் படைத்தரப்பால் உயர்பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் படையினர் தொடர்ந்து தென்னை மரங்களை அழித்து வருகின்றனர்.

இப்பகுதிகளிலுள்ள தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு, தங்கள் தோட்டங்களைப் பார்ப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டபோதும் அவர்களை தோட்டங்களைப் பார்க்கச் செல்வதற்கு படையினர் அனுமதிக்கவில்லை. பிரதான வீதியில் வைத்தே தோட்டங்களைப் பார்ப்பதற்கு உரிமையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். அப்போது தென்னை மரங்கள் பெருமளவு அழிக்கப்பட்டமை கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

முகமாலை, கிளாலி, கரம்பகம், எழுதுமட்டுவாழ் பகுதி தோட்டங்களே இவ்வாறு படையினரால் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)



பொற்பதி வீதியில் அமைந்துள்ள மேஜர் முரளி மைதானத்தில் இடம்பெற்ற தியாகி திலீபனின் நிகழ்வில் பொதுச்சுடரை புலித்தேவனும், தேசியக்கொடியை இளம்பரிதியும் ஏற்றிவைப்பதைப் படத்தில் காணலாம்.

## எழுவைதீவு கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை

எழுவைதீவுக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கென, கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பே மின்கம்பங்கள் நடப்பட்டுள்ள போதிலும், மின்சாரம் வழங்குவதற்குரிய மேலதிக வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டிற்கும், நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளுக்கும் மின்சாரம் வழங்கப்படுகின்ற போதிலும், இந்தத் தீவுக்கு மட்டும்தான் மின்சார சபையினரால் மின்சாரம் வழங்கப்படவில்லை.

அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகிவிட்ட மின்சாரம் தமது தீவுக்கும் கிடைக்குமா என ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் இந்தப் பகுதி மக்கள் இருக்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (83)



புத்தூர் கிழக்கு மகாத்மாஜீ முன்பள்ளி உடற்தகைமைப் போட்டி 29.09.03 வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வின்போது சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.வலய முன்பள்ளிப் பொறுப்பாளர் திருமதி. யோகராசாவையும், யாழ்.வலய சிற்றூழியர் சி.தவராசாவையும் படத்தில் காணலாம்.

## கொத்தியாலடி மயானப்பகுதியில் கழிவுப்பொருட்களால் துர்நாற்றம்!

சுன்னாகம் - புத்தூர் பிரதான வீதியிலுள்ள கொத்தியாலடியிலுள்ள இந்து மயானப்பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசுகின்றது.

இந்தப் பகுதியில் சுன்னாகம் நவீன சந்தைப் பகுதியிலிருந்து கழிவுப் பொருட்களைக் கொண்டுவந்து வீசுவதாலும், மாடுகளின் கொல்களம் அமைந்திருப்பதாலும் துர்நாற்றம் வீசுகின்றது.

இந்த இந்து மயானத்திற்கு உடல்களை தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்வோர் இதனால் சொல்லொணாத் துயரங்களைச் சந்திப்பதோடு, இந்த வழியால் பயணம் மேற்கொள்ளும் மக்களும் பல அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றனர்.

இதனால், கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதோடு இந்தக் கழிவுப்பொருட்களால் சுற்றுச்சூழல் மாசடைந்தும் வருகின்றது என்றும், பலர் கவலை கொண்டுள்ளனர்.

மேலும் பருவமழை ஆரம்பமாகவுள்ள இந்த வேளையில் இதனால் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாக இந்தப் பகுதி விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியாக இந்தப் பிரதேசம் உள்ளபோதிலும், உரியவர்கள் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்காமை குறித்து பயணிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். (83)

### கமநலசேவை உபஅலுவலகம் திறக்க நடவடிக்கை

நெடுந்தீவுப் பிரதேசத்தில் கமநலசேவைகள் நிலையத்தின் உப பணிமனையொன்று, மிக விரைவில் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

நெடுந்தீவுப் பகுதியில் கமநல சேவைகள் திணைக்கள அலுவலகம் இல்லாமையினால், அந்தப் பகுதி விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிகிறது.

### இலவச கணினிப் பயிற்சிநெறி

கனேடிய தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இலவச கணினிப் பயிற்சி நெறியை நடத்திவருகிறது.

இந்தப் பயிற்சி நெறியில் முதலிரு பிரிவு மாணவர்கள் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர். இவர்களில் இரண்டாவது பிரிவினருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்போது கணினிப் பயிற்சிப் பெற்று வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி நெறியில் அதிவிசேட சித்திபெற்ற மாணவர்களிற்கு - சிறப்பு பரிசில்களும், சான்றிதழ்களும் ஏனையோருக்கு தகைமைச் சான்றிதழ்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் வழங்கப்பட்டன.

கணினிப் பயிற்சி நெறிக்கான புதிய பிரிவுகள் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிநெறியால் வறிய மாணவர்களின் மேம்பாட்டுக்காக கனேடிய தமிழர் புனர்வாழ்வு கழகத்தினர் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி தொழில்நுட்ப கல்லூரியின் அபிவிருத்திக்கு ஏழு பேர் கொண்ட குழு!

(ஆழியவளை)

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரியை அபிவிருத்தி செய்வதற்கு 7 பேர் கொண்ட நடவடிக்கைக் குழு அண்மையில் நியமிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரியின் தலைவர் பொன்.விநாயகமூர்த்தி தலைமையில், கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பொருண்மிய மதியுரையக பொறுப்பாளர் தாஸ், வன்னிக் கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானம், கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.சின்னராசா தமிழீழ மாணவர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரியன், கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவன முதல்வர் தி.பிரபாகரன், கியூடெக் நிறுவன கிளிநொச்சி முல்லை மாவட்ட இணைப்பாளர் கணேசப்பிள்ளை, போரூட் நிறுவன வன்னி வெளிக்கள உத்தியோகத்தர் கா.சாந்தவிவில் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி கூட்டத்தில் அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், சிறான் செயலகப் பணிப்பாளர் இரேனியல் செல்வின் ஆகியோர் கலந்துகொண்டனர். (122)

## திருமுறிகண்டிப் பிரதேசம் புனித பிரதேசமாக்கப்படும்

### முல்லை அரச அதிபர்

கிளிநொச்சி - மாங்குளம் ஏ-9 வீதியில் அமைந்துள்ள திருமுறிகண்டிப் பிரதேசச் சுற்றாடல் புனித பிரதேசமாக்கப்படவுள்ளதாக, முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தினை உடனடியாக செயற்படுத்தச் சுமார் 10 தினங்களுக்குள் இந்தப் பிரதேசத்தின் சரியான வரைபடத்தினை தயாரித்து தனக்கு கையளிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

திருமுறிகண்டி ஆலயச் சுற்றாடலைப் புனிதப் பிரதேசமாக்குவதற்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த செவ்வாய் முல்லை அரச அதிபர் தலைமையில் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயச் செயலகத்தில் நடைபெற்றது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயப் பிரதேசம் புனித பிரதேசமாக்கப்பட இருப்பதால், ஒரு புனித பிரதேச சுற்றாடலுக்கு ஏதுவாக உள்ள கட்டுமானங்களை அமைப்பது சம்பந்தமான நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (122)

### தொழில்நுட்பக் கல்லூரி விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியின் 2004 ஆம் ஆண்டுக்கான கல்வியாண்டு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித்தினம் நீடிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 17 ஆம் திகதி வரை தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விநெறியைப் பயில விரும்பும் மாணவர்கள் தமது விபரங்களைப் பதிவுசெய்துகொள்ள முடியுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஊர்காவற்துறை பேரூந்தில் போக்குவரதுக்கு சிரமம்

(புன்னாலைக்கட்டுவன்)

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை சாலை வடபிராந்திய போக்குவரத்துச் சபை பேரூந்தில் காலை வேளையில் பயணம் செய்யும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7.30 மணிக்கு புறப்படும் இப் பேரூந்தில் ஊர்காவற்துறை, எழுவைதீவு மற்றும் அனலைதீவு பிரதேசங்களில் கடமைபுரியும் அரச திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்களே அதிகம் பயணம் செய்கின்றனர்.

இதில் அளவிற்கதிகமாக பயணிகள் ஏற்றப்படுவதால் - பலர் வாந்தியெடுப்பதையும், சிலர் மயக்கமடைவதையும் காணமுடிகின்றது. அத்துடன் இவர்கள் தொடர்ந்து சென்று தத்தம் திணைக்களங்களில் தம் வேலைகளை சரிவர நிறைவேற்ற முடியாது அவதிப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (83)


**கேள்வி அறிவித்தல்**

**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்**

**கல்வியங்காடு பொதுச்சந்தை புனரமைத்தல்**

**2003.09.04 ஆம் திகதி கேள்வி அறிவித்தலுக்கு மேலானது மேற்படி கேள்வி கோரல் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது**

1. கேள்வி விண்ணப்பம் பெறும் கடைசித் திகதி 2003.10.02 பி.ப.3.00 மணி.
2. கேள்வி கிடைக்கக்கூடிய கடைசித் திகதி 2003.10.03 பி.ப 2.00 மணி
3. கேள்வி திறத்தல் - 2003.10.03 திகதி பி.ப 3.00 மணி

செ.பத்மநாதன்,
தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை,
யாழ்ப்பாணம்.

சி/1607

**மலிவு விற்பனை**

புத்துலகப் பிரவேசக் கண்காட்சியில் மில்க்வைற் உற்பத்திப் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற்
த.பெ.இல.77
யாழ்ப்பாணம்

(சி-1475)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**

அஜீத், லைலா நடித்த

**தீனா**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

**ULTRA FORCE- 2**

(சி-1425)

**ராஜா யாழ்ப்பாணம்.**

சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டிராஜன நடித்த

**ராமச்சந்திரா**

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

(சி-1424)

ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்



45 ஆண்டு காலம் யாழ்./வண்/நீராவியடி பிள்ளையார் கோவில் அருகாமையில் சோதிடத் தொழில் புரிந்து மக்களிடையே நன்மதிப்பும்- பிரபலமும் பெற்றவரான,

சோதிடமேதை அமரா S.பாலகுருசாமி அவர்களின் இளைய வாரிசு

**சுபா.கணேசலிங்கன்**

தற்போது இந்தியாவிலிருந்து இங்கு வருகைதந்துள்ளார்.

ஜாதகம் கணித்து எழுதுதல், பலன் சொல்லுதல் - எண்சோதிடம் பார்த்தல் - வீடு வாஸ்து நிலையம் பார்த்தல் - கிரகதோஷ நிவர்த்திக்கு வழி அறிதல் அனைத்திற்கும் அவரை நேரில் சந்தித்து துல்லியமான பலன்களை அறிந்துகொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:
**சோதிடர் சுபா கணேசலிங்கன்**
நியூ ஆனந்தா மேல் மாடி,
N.A. லொட்ஜ்
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 2226339

(492)

## இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக யெவ்ரி லங்ஸ்வன்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக யெவ்ரி லங்ஸரீவன் நியமனம் பெற்றுள்ளார்.

தனது நியமனப் பத்திரத்தை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக் கொண்ட யெவ்ரி லங்ஸ்ரீவன், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று தனது பொறுப்பினை ஏற்றுக்கொண்டார்.

யூலை 28 ஆம் திகதி முதல் இவர் இலங்கைக்கும் மாலைதீவுக்குமான தூதுவராகச் செயற்பட்டு வந்துள்ளார்.

1977 ஆம் ஆண்டு சிரேஷ்ட வெளியுறவுச் செயலாளராகவும் இவர் கடமையாற்றியிருந்தார்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா ஆகிய நாடுகளில் கடமையாற்றிய அனுபவமும் இவருக்குண்டு.

1969, 70 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவின் கடற்படையில் ஒரு அங்கத்தவராகவும் இவர் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் ரணில் நாடு திரும்பியதும் ஜனாதிபதியுடன் முக்கிய பேச்சு!



(கொழும்பு)

பிரதமர் ரணில் நாடு திரும்பியதும் ஜனாதிபதியுடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடுவார் என தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே நடைபெறுகின்ற சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக - நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் கோபி அனானைச் சந்தித்து பிரதமர் ரணில் விளக்கினார்.

அத்துடன், நியூயோர்க்கில் யு.என்.டி.பி, யுனிசெப் பிரதிநிதிகளையும் சந்தித்து பிரதமர் ரணில் பேச்சு நடத்தினார்.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையை எவ்வாறு முன்னெடுப்பது என்பது பற்றி பிரதம மந்திரி ரணில்- ஜனாதிபதியுடனான சந்திப்பில் இருவரும் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் திங்கட்கிழமை நாடு திரும்பவுள்ள பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர் - இரண்டு வார காலத்துக்குள் ஜனாதிபதி சந்திரிகாவை ரணில் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



## உரிமைகோரப்படாதுள்ள 4 கோடி 20 லட்சம் ரூபா

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையினால் நடத்தப்பட்டுவரும் 'மகஜன சம்பத' சீட்டிழுப்பின் அதிர்ஷ்டசாலியான ஒருவருக்குரிய 4 கோடி 20 லட்சம் ரூபா உரிமைகோரப்படாது இருப்பதாக, தேசிய லொத்தர் சபை அறிவித்துள்ளது.

### விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

கைத்தொழில் திணைக்களத்தின் கண்காட்சியில் நடைபெற்று வருகின்ற தொழில் வழிகாட்டல் மற்றும் அறிவுரை வழங்கும் நிகழ்வை நடத்திவருகின்ற தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் பி.கதிர்காமநாதனிடமிருந்து உயர்கல்வி மற்றும் வழிகாட்டல் கற்கைக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று, பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## தேசியப் பிரச்சினையில் மௌனமான இருப்பதாக

## பௌத்த மகாநாயக்கர்கள் மீது பிக்குமார் முன்னணி கடும் சீற்றம்!

தேசிய ரீதியில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக மகாநாயக்கர்கள் அமைதியாக இருப்பதாக - பிக்குமார் முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

நாம் எமது பௌத்த சமயத்தைப் பொறுப்புணர்வுடன் எமது நாட்டில் பாதுகாக்க வேண்டும் என்று, அண்மையில் நடந்த கூட்டமொன்றில் இவர்கள் தெரிவித்தனர்.

முன்னணியின் செயலாளர் வண.கெடிகல விமலசார தேரர் எமது பௌத்த சமயத்தினை நாம் உறுதியான முறையில் நாட்டில் நிறுவ வேண்டுமெனத் தெரிவித்தார்.

## குரங்குப்பாஞ்சான் பிரதேசத்தில் மீள்குடியமர்வை ஆராய குழு!

(திருகோணமலை)

குரங்குபாஞ்சான் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்தல், நெற்செய்கையினை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கென - ஏழுபேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் நேற்று திருகோணமலை மாவட்டப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருடன் சந்திப்பொன்றை நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் - இந்தப் பிரதேசத்தில் நெற்செய்கையினை நாம் மேற்கொண்டால், இரவு நேரங்களில் அந்தப் பகுதிக்குச் சென்றுவர கண்காணிப்புக்குழுவினர் ஆவன செய்ய வேண்டுமெனக் கோரியதுடன், தமது மீள்குடியமர்வு தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

இந்த ஏழு பேர் கொண்ட குழுவினர் - அண்மையில் கிண்ணியாப் பிரதேச செயலகத்தில் மாவட்ட செயலர் றொட்றிக்கோ தலைமையில், குரங்குபாஞ்சான் பகுதியில் மீள்குடியமர்வு தொடர்பாக நடந்த கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

## சமாதான முயற்சிக்கு எதிராக தேசிய சம்மேளனம் ஊர்வலம்

சமாதான முயற்சிக்கு எதிரான - தேசிய சம்மேளனங்களின் எதிர்ப்பு ஊர்வலம் நேற்று ஆரம்பமாகியுள்ளது. கண்டியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊர்வலம் மாவனல்லப் பகுதிக்குச் செல்லும் என்றும், மாவனல்லையிலிருந்து - வராகிபொல, நித்தம்புவ, கடவத்தை வழியாக சென்று கொழும்பை வந்தடையுமென்று கூறப்படுகிறது.

நேற்று கண்டி தலதா மாளிகைக்கு முன்பு ஆரம்பமான இந்த ஊர்வலம் திருகோணமலை வீதியை நேற்று சென்றடைந்தது.

இந்த ஊர்வலத்தில் ஜே.வி.பியின் விமல் வீரவன்ச, பொதுஜன ஐக்கிய முன்னணியின் சரத் அமுனுகம, தினேஷ் குணவர்த்தன, அர்ஜுன ரணதுங்க, மங்கள சமரவீர, ரட்ணசிறி விக்கிரமசிங்க, ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே, மேர்வின் சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான சுலோகங்களும், வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிரான சுலோகங்களும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களால் எடுத்துவரப்பட்டன.

இதேவேளை - 1808 ஆம் ஆண்டு வெள்ளையர்களுக்கு எதிராகப் போராடி இறந்தவர்களான வீரதுரைசாமி, வீரபுரணப்பு ஆகியோரது பெரியளவிலான உருவப்படங்களும் இந்த ஊர்வலத்தில் எடுத்துவரப்பட்டன.

1848 ஆம் ஆண்டு வெள்ளையர்களுக்கு எதிராகப்போராடி இறந்தவர்களான மொனதவியா, கெப்பிற்றிப்கொல, குடாபொலதேரர் ஆகியோரின் உருவப்படங்களும் இந்த ஊர்வலத்தில் எடுத்துவரப்பட்டன.

வெள்ளையர்களான நோர்வேத் தரப்புப் பிரதிநிதிகளை வெளியேறுமாறு கோரியே - வெள்ளையர்களுக்கு எதிராகப் போராடியவர்களின் உருவப்படங்களை இவர்கள் எடுத்துவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட

## சிறுவர் பாதுகாப்பு பிரிவினர் இலங்கைக்கு வந்துள்ளனர்!

லண்டனை தலைமையகமாகக் கொண்ட சர்வதேச சிறுவர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இருபது பேர் நேரி மார்க்கிரட் தலைமையில் ஐந்துநாள் விஜயமாக இலங்கை வந்துள்ளனர்.

இலங்கை வந்துள்ள இவர்கள், சமாதான நிலைப்பாடு தொடர்பாக அறிந்துகொள்வதுடன், சிறுவர் இல்லங்கள் போன்றவற்றின் அடிப்படை வசதிகள் பற்றியும் ஆராய்ந்து அவர்களுக்கான உதவிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் - கொழும்பு, நீர்கொழும்பு, கண்டி, நுவரெலியா, திருகோணமலை போன்ற மாவட்டங்களுக்குச் சென்று, சிறுவர்கள் தொடர்பான தரவுகளையும், சிறுவர் இல்லங்களையும் பார்வையிடவுள்ளனர்.

நேற்று முன்தினம் திருமலை சென்ற இவர்கள், திருமலையிலுள்ள சிறுவர் இல்லங்களைச் சென்று பார்வையிட்டு, அவர்களது அடிப்படைத் தேவைகளையும் கேட்டறிந்து கொண்டனர். இவ்வாறு சிறுவர் இல்லங்களுக்கு செல்லும்போது - இவர்கள் அனைவரும் துவிச்சக்கரவண்டிகளிலேயே சென்றனர்.

இவர்கள் தமது பயணத்தை முடித்துக்கொண்டு 15 பேர் பஸ்ஸில் கொழும்பு பயணமாக, மிகுதி 5 பேரும் கொழும்பு செல்வதற்காக, திருமலை நகரிலுள்ள மக்கேசர் விளையாட்டு மைதானத்தில் ஹெலிகொப்ரரின் வருகைக்காகக் காத்துநின்றனர். இவர்களை ஏற்றிச் செல்ல வந்த உலங்குவானூர்தி மீள்பறப்பை மேற்கொள்ளமுடியாமல் பழுதடைந்தது!. பின்னர், பொறியிலாளர்குழு வந்து திருத்த வேலைகளை மேற்கொண்டும் - அது இயங்காத காரணத்தால் வேறொரு ஹெலி வந்து, மைதானத்தில் நின்ற ஐந்து பேரையும் ஏற்றிச் சென்றது.

நேற்று முன்தினம் கொழும்பு சென்ற இவர்கள்- தாம் தயாரித்த திட்டங்களை வைத்து, சிறுவர் இல்லங்களுக்கான உதவிகளை இன்று செய்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.(04)



நெடுந்தீவில் நடைபெற்ற தியாகி திலீபனின் 16 வது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வில் - நெடுந்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் கண்ணன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதை முதலாவது படத்திலும், நெடுந்தீவு மக்கள் ஒன்றியத் தலைவர் பி.மரியாம்பிள்ளை பொதுச் சுடர் ஏற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## மாணவன் தற்கொலை

குற்றம் செய்த காரணத்தினால் ஒரு வார காலம் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மாணவன் ஒருவன் புகையிரதம் முன் பாய்ந்து தற்கொலை செய்துள்ளான்.

குருணாகல சிறிமத் ஜோன் கொத்தலாவல மகாவித்தியாலயத்தில் க.பொ.த சாதாரணதர வகுப்பில் படித்த அயேஸ் சிந்தக (வயது 14) என்ற மாணவனே இறந்தவராவார்.

## வெடிபொருட்களை பாவித்து மீன்பிடிப்பதற்கு தடை விதிப்பு!

(கொழும்பு)

கடற்றொழில் நீரியல்வள திருத்தச் சட்டமூலத்தால் - வெடிபொருட்களைப் பாவித்து மீன்பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயலில் ஈடுபடுவோருக்கு - 10 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையில் அபராதம் அல்லது 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது இரண்டு தண்டனைகளும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது முறையாக இந்தக் குற்றம்புரிந்தால் - 1 இலட்சம் ரூபா அபராதம் அல்லது சிறைத் தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்தொழில் நீரியல் சட்டத் திருத்த மூலங்கள் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டபோதே மேற்படி விடயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீன்பிடித்துறையின் அபிவிருத்திக்கென வங்கியொன்று உருவாக்கப்படவுள்ளது!

### நீரியல்வளத்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகர

மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்காக வங்கி ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக, நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகர நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே மகிந்த விஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைக்கப்படவுள்ள வங்கியானது மீன்பிடித்துறையின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் இருக்குமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு - தற்போது தனியார் வங்கிகள் செய்துகொடுக்கும் கடன்வசதிகள் போதாத காரணத்தினாலேயே, அதனை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த வங்கி உருவாக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஏனைய வங்கிகள் போன்று, உலகளாவியரீதியில் தொடர்புகளை வைத்திருக்கும் வங்கியாக இந்த வங்கி செயற்படுமென்று தெரிவித்த அமைச்சர்,

மீனவர்கள் மீன்களை ஏற்றுமதி செய்யும்போது, நல்லின மீன்களை ஏற்றுமதி செய்துகொள்ளவும், ஏனைய சர்வதேச நாடுகளில் பணப்புழக்கத்தினை மீனவர்கள் கொண்டிருக்கவும், இந்த வங்கி மூலம் வழியேற்படும் என்றும் அமைச்சர் விஜயசேகர மேலும் தெரிவித்தார்.

# தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் பாவனைக்குதவாத மருந்துகள் விற்பனை!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் காலாவதியான, பாவனைக்குதவாத மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன. இது தொடர்பாக, பொது மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என, சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.குடாநாட்டில் இயங்கி வரும் ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களில், (பார்மசி) வைத்தியர்களுடைய சிட்டைக்கு சில சந்தர்ப்பங்களில் தவறான மருந்துகள், காலம் கடந்த மருந்துகள், பதிவு செய்யப்படாத மருந்துகள் ஆகியன விற்பனை செய்யப்படுவதாக ஒரு சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதேபோன்று, பல சம்பவங்கள் எமது கவனத்திற்கு கொண்டு வரப்படாமல் தவறியிருக்கலாம்.

இப்படியான தவறான, காலம் கடந்த, பதிவு செய்யப்படாத மருந்து வகைகளை விற்பனை செய்வதால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டு, வருங் காலங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இப்படியான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் மருந்தகங்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, தவறுகள் உறுதிப்படுத்தப்பட்டால் - அம் மருந்தகங்களின் அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படும். மருந்தக உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு, மருந்தகங்களை மூடிவிடவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கினறோம்.

பாவனையாளர்கள் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் தொடர்பாக முகங்கொடுக்க நேரிட்டால், அது தொடர்பாகத் தகுந்த ஆதாரங்களுடன், அதாவது விற்பனை செய்யப்பட்ட மருந்துகளுடன் அதற்கான பற்றுச்சீட்டும், வைத்தியர்களுடைய சிட்டையுடனும்- ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாத்திலுள்ள சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையுடன் தொடர்பு கொண்டால், முறைப்பாடு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். பாவனையாளர்கள் தகுதி வாய்ந்த மருந்தாளர் ஒருவர் கடமையிலிருக்கும் மருந்தகங்களில் மருந்துகளை வாங்கவேண்டும் என்றும், காலாவதியாகும், திகதியில்லாத மருந்துகளை வாங்கவேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கிறோம். தகுதி வாய்ந்த மருந்தாளர்களுள்ள மருந்தகங்களில் அவர்களின் புகைப்படத்துடனான லைசென்ஸ் - பாவனையாளருக்குத் தெரியக்கூடியதாக வைக்கப்பட்டிருக்கும்.

பிரச்சினைகளைக் கூடியளவு தவிர்ப்பதற்கு, நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மருந்திற்கும் பற்றுச்சீட்டை கேட்டுப் பெற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக் கொள்கிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, விடுதலைப்புலிகள் மருந்துப் பொருட்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் வரிவிலக்கு அளித்துள்ளனர். ஆனால், சில வர்த்தகர்கள் வரியைக் காரணம் கூறி, கூடுதலான விலைக்கு மருந்துகளை விற்பனை செய்வதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.



இளவாலை திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற சிறுவர் கலைக்கூட சிறார்களின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இன் நிகழ்வின்போது, திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் ஜே.ஜோன்சன் ராஜ்குமார் மங்கள விளக்கேற்றி வைப்பதைப் படத்தில் காணலாம் (41)

# முதியோர் மற்றும் சிறுவர் தினவிழா நிகழ்வுகள் தம்பாட்டி பொதுமண்டபத்தில் நடைபெறவுள்ளது

ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பணிமனையினரால் நடாத்தப்படும் முதியோர் தினவிழாவும், சிறுவர் தினவிழாவும் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 10 மணிக்குத் தம்பாட்டி பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக பிராந்திய ஆணையாளர் பி.சிவலிங்கமும், தீவக அரசியல் பொறுப்பாளர் செ.அருந்தவமும் கலந்துகொள்ளவுள்ளனர். மேற்படி நிகழ்வில் முதியோர் மன்றம் சிறுவர் தினம் தொடர்பாக பாடசாலை மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் சிறுவர்கள் முதியோர்கள் கௌரவிப்பு நிகழ்வும் அத்துடன் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

## குறும்பட வீடியோ காட்சி

தீண்டத்தகாத நாடு, ஒரு விதியின் மரணம் ஆகிய இரு குறும்படங்களின் வீடியோக் காட்சி - யாழ்பாண பல்கலைக்கழக புவியற்துறை மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இயக்குநர் ஆர். ஆர். சீனிவாசனும் பங்கேற்கவுள்ளார். படக்காட்சியின் இறுதியில் படங்களைப் பற்றிய விவாதமும் நடைபெறவுள்ளதாகப் புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவித்தார்.

## நிவாரண முத்திரை வழங்கல்

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்து வாழும் 47 குடும்பங்களுக்கான இடம் பெயர் நிவாரண முத்திரையின் புதிய தொடர் முத்திரை, நேற்றுமுதல் புலோலி உபயகதிர்காமத்தில் இயங்கும் நாகர் கோவில் மேற்கு கிராம அலுவலர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை அறிவித்துள்ளார். (17)

## காரைநகரில் முதியோர் தினவிழா

காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை சமூக சேவைப் பிரிவால் நடத்தப்படும் முதியோர் தின விழா, எதிர்வரும் 3 ஆம் திகதி மாலை - பணிமனை மண்டபத்தில் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது. பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும், முதியோருக்கான நடைப் போட்டியும், முதியோர் கௌரவிப்பும் அன்றைய தினம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நவராத்திரி விழா

நவராத்திரி தினத்தை முன்னிட்டு மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசலை மாணவர்களின் நவராத்திரி விழா இன்று காலை 9.30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இந்த விழா - ஜெ.வைர வமூர்த்தியின் தலைமையில் நடை பெறவுள்ளது. ச.தியாகராஜாவின் உரையும், மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

# சிறைச்சாலையில் வயோதிபர் மரணம்

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர், நேற்று முன்தினம் மரணமானார். காங்கேசன்துறையைச் சேர்ந்த பொன்னையா கந்தசாமி (வயது 72) என்பவரே மரணமானவர் ஆவார்.

இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அத்துமீறி பிரவேசித்தமைக்காகவே இவர் கைது செய்யப்பட்டு, சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் எனக் கூறப்படுகிறது. அவரது சடலத்தைப் பொறுப்பேற்க உறவினர்கள் எவரும் முன்வராமையினால், சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மனநிலை பாதிக்கப்பட்டிருந்த இந்த வயோதிபர் - இராணுத்தினருடன் கைதுக்கு முன்னர் தகாத வார்த்தைப் பிரயோகங்களிலும் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரவு படுக்கைக்குச் சென்ற வயோதிபர், காலையில் பிணமாக இருந்ததாகவும், அவரது சடலத்தை தாம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ரா)

# மாக்ஸ்வாத கல்வி கோட்பாடு இலங்கையில் விஸ்தரிப்பு

ஐக்கிய சோஷலிசக் கட்சியின் கல்விப் பிரிவு மாக்ஸ்வாதக் கல்வி நடவடிக்கைகளைப் பாரிய அளவில் முன்னெடுப்பதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளதாக அக்கட்சியின் செயலர் சாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்தக் கல்வி முன்னெடுப்பு நடவடிக்கை முதற்கட்டமாகக் கொழும்பு பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படுகிறது.

நேற்றும் இன்றும் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கும் அமைப்பு, கோட்டைவீதி, ராஜகிரிய என்ற விலாசத்தில் மாக்ஸ்வாத கோட்பாட்டுக் கல்விமுகாம் நடத்தப்படவுள்ளதாகவும்,மாக்ஸ்வாத தத்துவம், சுவதேச வாதத்தின் சரித்திரம் சோஷலிசக் கட்சியின் சரித்திரம், தேசியப் பிரச்சினை, மாக்ஸ்வாத வியூகம் ஆகிய தலைப்புக்கள் இந்த முகாமில் எடுத்தாளப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் ஆறுமாத அபிவிருத்தித் திட்டத்தின் ஓர் அம்சமான இக் கல்வி கோட்பாட்டு முகாமின் நோக்கம் - அங்கத்தவர்களினதும், பொது மக்களினதும் அரசியல் அறிவை உயர்த்துவதாக அமைந்துள்ளது.

# கணேச சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை காலை 9.30 மணிக்குக் கணேச சனசமூக நிலைய பிரதான மண்டபத்தில் சனசமூக நிலையத் தலைவர் நா.திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியும், சிறப்பு விருந்தினர்களாக வலி. தெற்கு பிரதேசசபை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.செல்வ விநாயகமும், வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ.அரிகரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சனசமூக நிலைய வருடாந்தக் கணக்கறிக்கையை, நிலைய விளம்பரப்பலகையில் பொதுமக்கள் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (83)

# பட்டதாரிகள் சங்கத்தில் பதிவுசெய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இதுவரை மீள் பதிவுகளை மேற்கொள்ளாத பட்டதாரிகள், இன்று காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு மேற்படி சங்கம் கேட்டுள்ளது.

இதேவேளை - வணிக, முகாமைதுவ மற்றும் உயர்கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு, காலை 930 மணி முதல பிற்பகல் 2.30 மணிவரை சம்பந்தப்பட்ட பட்டதாரிகளைச் சமுகம் தருமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது.

# புதிய மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடாத்தும் புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை, இன்று யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்காக விண்ணப்பித்து தோற்றவுள்ள பரீட்சாத்திகளுக்கான அனுமதி அட்டைகள், நேற்றுமுன்தினம் முதல் வழங்கப்பட்டு வருகின்றது எனப் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் செயலாளர் தெரிவித்தார். (116)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

பெயர் : ரா.வெனிற்றா
முகவரி: நாரந்தனை மத்தி, ஊர்காவற்றுறை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# இவர் தோற்க மாட்டார்

சர்வதேசக் கிரிக்கெட்போட்டிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், இந்தியா மற்றும் இலங்கையில் அப்போட்டிகள் நடைபெறும்போது, அது தொடர்பில் காட்டும் ஆர்வமும், அக்கறையும் மிகவும் அதிகம். அதுவும் இந்திய அணி விளையாடுகிறது எனும்போது, ஏனோ அவர்கள் மீது ஒரு பரிவும், பாசமும் எம் ரசிகர்களுக்கு ஏற்பட்டு விடும். இது பாரம்பரியமாகவே உள்ளதொருநிலை. தற்போது இந்திய மண்ணில் வந்து கால் பதித்து இருப்பவர்கள் நியூசிலாந்து அணியினர். இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இந்தியா, நியூசிலாந்து அணிகள் பங்கு கொண்டபின், தொடங்கவிருக்கிறது அருமையானதொரு முத்தரப்பு ஒரு நாள் சர்வதேசப்போட்டிகள். மூன்றாவது நாடு வேறுயாருமல்ல அவுஸ்திரேலியாதான்.

இந்தநிலையில், நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளெமிங் - இந்தியா வந்தடைந்ததும், தனது கருத்துக்கள் சிலவற்றை முன்வைத்துள்ளார். ஒரு சில வருடங்களுக்கு முன் நியூசிலாந்து அணியா! ஏதோ பரவாயில்லை என்றதொரு நிலையில் இருந்து, நியூசிலந்து அணி அபாரமானது! என்று சர்வதேச சமூகம் வியப்புறவைத்தவர். அவ்வளவு திறமைசாலி என்றால், அதேயளவு கண்ணியமான இயல்புகளும் கொண்டவர் பிளமிங்.



ஸ்ரீபன் பிளெமிங்
அன்பினால் கட்டுவோம்

அவர் கருத்துக் கூறும்போது இந்தியாவுடன் விளையாடுவது என்பது உண்மையில் அவுஸ்திரேலியாவுடன் விளையாடுவதிலும் இருந்து வேறுபட்டது, கடுமையானது என்று கூறியிருக்கிறார். கிரிக்கெட் உலகில் இந்தியா மிகுந்த கிளர்ச்சியையும், ஈர்ப்பையும் தரும் நாடு என்கிறார் அவர். இந்தியக் காலநிலை வித்தியாசமானது. இந்திய மக்கள்-தம் அணி வெல்ல வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டுபவர்கள். அதுவும் ஸ்ரேடியத்தில் மலைக்க வைக்கும் எண்ணிக்கையில் கூடுவார்கள். அதோடு, இந்திய விக்கெட்டுக்கள் சுழல் பந்து வீச்சாளர்களுக்குக் கூடுதல் சாதகமாக அமையக் கூடியது. ஹர்பஜன், கும்ளே இருவரும் மிகச் சிறந்த சுழல் பந்து வீச்சாளர்கள். நாங்கள் இவர்களுடன் அனுபவம் பெற்றிருக்கிறோம். மேலும் இலங்கைச் சுற்றுப்பயணத்தில் உலகின் சிறந்த பந்து வீச்சாளர் முரளியை எதிர்கொண்டு சமாளித்துள்ளோம். அதோடு, இரண்டு டெஸ்டுகளையும் சமப்படுத்தி உள்ளோம். ஆகவே, இலங்கை அனுபவம் - இந்தியாவில் எமக்கு உபயோகமாக இருக்கும் என்கிறார். இலங்கையுடனான முதலாவது டெஸ்டில் ஆட்டம் இழக்காமல், 274 ஓட்டங்கள் எடுத்தவர் பிளெமிங். அதேபோல, கடநத உலகக் கிண்ணப் போட்டிகளில் கடினமானதொருநிலையில் தென்னாபிரிக்கப் பந்து வீச்சாளர்களுக்குச் சாத்துச் சாத்தென்று சாத்தி, அவர்களைத் தோற்கடித்தவர் இவர்.

நியூசிலாந்தில் இந்தியா விளையாடிய டெஸ்ட் தொடரில், இந்தியா படுதோல்வி கண்டது கடந்த வருடம். அதனால் இந்தியா - இந்தியாவில் வைத்து நியூசிலாந்திடம் கணக்குத் தீர்த்துக் கொள்வதாக இது இருக்குமா என்பதற்கு, உக்கிரமான போட்டியாக இருக்கும் என்பது சரி. ஆனால், பழிக்குப்பழி போன்றதொரு பாவனை இருக்கப் போவதில்லை என்று கூறியிருக்கிறார். தனது நான்காவது கிரிக்கெட் சுற்றுப்போட்டியாக இந்தியா வந்திருக்கும் முப்பது வயதான ஸ்ரீபன் பிளெமிங். ஆட்டங்களின் முடிவுகள் மாறி மாறி அமையலாம். ஆனால், ஸ்ரீபன் பிளெமிங் முற்று முழுதாக வெற்றி காணப் போகிறார் ஒரு விடயத்தில். அதுதான் இந்திய ரசிகர்களின் மனதை வென்றெடுக்கும் போட்டியில்.

(நிலா)

# அள்ளு அள்ளு

உலகளாவிய ரீதியில் கிரிக்கெட்டைப் பரப்பவும், கிரிக்கெட்டை வளர்க்கவும் தேவைப்படும் நிதியைச் சேகரிப்பதும் மற்றும் வித்தியாசமான ஆட்டங்களைக் கொடுப்பதும் என்றவகையில், **ICC** ஆனது **SUPER SERIES** என்றொரு சுற்றுப்போட்டியை ஆரம்பிக்கிறார்கள். இந்தப் போட்டியானது, குறிப்பிட்ட வருடத்தின் அதிசிறந்த டெஸ்ட் அணி மற்றும் ஒருநாள் அணி இரண்டும் - உலக அணிக்கு (**REST OF THE WORLD TEAM**) எதிராக ஆட்டங்களில் ஈடுபடுவார்கள்.



இஷான் மாணி
பணமில்லாதவன் பிணம்

உலக அணியைத் தெரிவு செய்யும் பொறுப்பு - **ICC** இற்கு உடையதாக இருக்கும். இந்த வகையில் இரண்டு வருடத்துக்கு ஒருமுறை நடைபெறவிருக்கும் இந்தச் சுற்றுப்போட்டி - ஒரு ஐந்து நாள் ஆட்டம் மற்றும் மூன்று ஒருநாள் ஆட்டங்களைக் கொண்டதாக அமையப்போகிறது.

இரண்டு வருடத்துக்கு ஒருமுறை நடைபெறவிருக்கும் இந்த நான்கு போட்டிகளுக்கும், உத்தியோகபூர்வ அந்தஸ்த்தைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. தற்போதைய முதன்மை நிலை அணி அவுஸ்தி ரேலியாவாக இருந்தாலும், 2005 ஆம் ஆண்டிலிருந்தே இந்தச் சுற்றுப் போட்டி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

இதற்கு முன்னதாக நிதிசேகரிப்பு ரீதியில் ஆரம்பிக்கப்பட்டதுதான் சாம்பியன் கிண்ணப் போட்டிகள். இந்த ஒரு நாள் போட்டிகளில் பத்து டெஸ்ட் அந்தஸ்த்துப் பெற்ற நாடுகளும், இரண்டு அசோசியேட் அங்கத்துவ நாடுகளும் கலந்துகொண்டன. இதுவரையில் 1998 ஆம் ஆண்டு பங்களாதேசத்திலும், 2000 ஆம் ஆண்டு கென்யாவிலும், 2002 ஆம் ஆண்டு இலங்கையிலும் என்று, மூன்று சுற்றுப்போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

இதுவரையில் உலகத்தெரிவு அணிகள் என்றபெயரில் கலந்துகொண்ட கிரிக்கெட் போட்டிகளுக்கு, உத்தியோகபூர்வ அந்தஸ்த்து வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், தற்போது அறிமுகப்படுத்தப்படவுள்ள சுற்றுப்போட்டியில், சாதனைகள் ஏற்றுக்கொள்ளப்படும். எனவே, இந்த **SUPER SERIES** சுற்றுப்போட்டிகள் விறுவிறுப்புடன் நடந்தேறக்கூடிய சாத்தியங்கள் அதிகம்.

யாழ்.மதி

## விளையாட்டு அரங்கம்

# போட்டிக்குத் தயாராகும் இந்திய அணிக்கு

**நா**ன்கு மாத ஓய்வுக்குப் பின், இந்திய அணி ஒருவாறு அடுத்தமாத நடுப்பகுதியில் நியூசிலாந்துடன் டெஸ்ட் தொடரைச் சந்திக்கப் போகிறது. இந்த வருட ஆரம்பத்தில் நியூசிலாந்தில் விளையாடிய இந்திய அணி, படுதோல்விகளைச் சந்தித்துக் கொண்டது. ஆனாலும், கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் மிகமிகச் சிறப்பாக விளையாடி, இறுதியாட்டம்வரை முன்னேறி, எல்லோரதும் பாராட்டுக்களைப் பெற்றது. பந்தை வீசக்கூடிய இளம் வீரரான முனாப்பட்டேல் மற்றும் இவருடன் பாலாஜி என்ற தமிழ்நாட்டு வீரர் போன்ற வேகப்பந்து வீச்சாளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். எனவே, இந்திய அணிக்குத் தற்போது வேகப்பந்து வீச்சில் குறைவிருக்காது என்றும், இது நடைபெறவிருக்கும் நியூசிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரிலும், தொடர்ந்து வரும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்திய அணிகள் பங்கேற்கும் முக்கோணக் கிண்ண ஒரு நாள் போட்டிகளிலும் பெரிதும் உதவும் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை, இனிவரும் போட்டிகளில் சிறப்பாக விளையாடுவதற்காக் கடும் பயிற்சிகளும் நடைபெற்று வருகின்றது. இவற்றுள் கூடைப்பந்தாட்டம், உடற்பயிற்சி, உளவியல் பயிற்சிகள், அதுசார்ந்த போதனைகள் என்பவற்றோடு, யோகாசனப் பயிற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இந்திய அணி நெருக்கடியான சூழ்நிலைகளிலும் பதற்றமடையாது, உடலையும், உள்ளத்தையும் ஒருநிலைப்படுத்தி விளையாடுவதற்காகவே யோகாசனப் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதற்காக இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக யோகாசனம் பயிற்றுவிப்பவர்களைத் தேர்ந்தெடுதது, ஆக மொத்தம் இந்தியா அடுத்துவரும் வெற்றிகளுக்காகத் தன்னைப் பெரிதும் வருத்திப் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டுவருகிறது.



ராகுல் ட்ராவிட்
பார்த்திவைப் பயன்படுத்துங்க

அடுத்துவரும் போட்டிகள் இந்தியாவுக்கு மிக வும் சவாலாகத்தான் இருக்கப் போகிறது. நியு,சிலாந்தும், அதனைத் தொடர்ந்து நியூசிலாந்து அணியுடன் அவுஸ்திரேலிய அணியையும் சந்திக்கப்போகிறது. பலம் வாய்ந்த இந்த அணிகளை இந்தியா வென்றுவிட்டால், இந்திய அணியின் மனோதிடமும, நம்பிக்கையையும் மேலும் அதிகரிக்கும். அதற்குமாறாக நடந்தால், இந்திய அணியின் எதிர்கால விளையாட்டுகளில் சிறு சரிவு அதாவது, ஒருவித சலிப்புக் காணப்படுவதில் ஐயமில்லை.

இதேவேளை, இந்திய அணியில் தற்போதுள்ள பிரச்சினை - ஒருநாள் போட்டிகளில் விக்கெட் கீப்பராக ட்ராவிட் இருக்க மறுக்கிறார் என்பதே. கங்குலி, தொடர்ந்தும் கீப்பராக ட்ராவிட்டே இருப்பார் என்று கூறிவந்தாலும், ட்ராவிட் அதனை நிராகரித்தபடியே இருக்கின்றார்.

# யார் Keeper

டெஸ்ட் போட்டிகளில் இந்தப் பிரச்சினைகள் இல்லாவிட்டாலும், ஒருநாள் போட்டிகளில் ட்ராவிட்டை விட்டு, இன்னொருவரைப் புதிதாக அணியில் சேர்த்துக் கொள்ள முடியாதநிலை இந்தியாவுக்கு இருக்கிறது. கடந்த வருடம் ஒருநாள் போட்டிகளில் அஜய் ரத்திரா **Wicket Keeper** ஆக இருந்தார். ஆனாலும், உறுதியான அணிக்கு அசைக்கமுடியாத துடுப்பாட்ட வரிசை ஒன்று தேவைப்பட்டது.

வீரேந்தர் ஷேவாக், யுவராஜ் சிங், மொகமட் கைவ் மற்றும் தினேஸ் மொங்கியா ஆகியோர் சிறந்தமுறையில் **Batting** செய்தார்கள். அவ்வப்போது அணியின் வெற்றிக்கு ஆதாரமாக இருந்தார்கள். ஆனால், அஜய் ரத்ராவைப் பொறுத்தமட்டில், சிறப்பாக **Keeping** செய்தாலும்கூட, **Batting** ஆனது அவரிடமிருந்து இன்னும் முற்றாக வெளிக் கொணர முடியாதிருந்தது. (கடந்த வருடம் தென்னாபிரிக்காவில் டெஸ்ட் போட்டியொன்றில் சதம் ஒன்றைக் குவித்தாலும்கூட) இதேவேளை - கங்குலி, சச்சின், ட்ராவிட் போன்ற மூத்த வீரர்களையும், தினேஸ், மொங்கியா, யுவராஜ் சிங், மொகமட் கைவ், வீரேந்தர் ஷேவாக் ஆகியோரையும் கட்டாயம் அணியில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற தேவை அணிக்கு ஏற்பட்டது. பந்துவீச்சாளர்களையும் சேர்த்தால், அஜய் ரத்ராவின் நிலை 12 ஆவது இடமாகத்தான் இருந்தது. இதன் காரணமாகவே ட்ராவிட்ரை கீப்பராக அமர்த்த வேண்டிய தேவை அணிக்கு ஏற்பட்டது. அதன் நிமித்தம் ட்ராவிட் பெரிதாகக் குறை கூறும்படியாக **Keeping** செய்யவில்லை. கணிசமானளவு சிறப்பாகத்தான் **Keeping** ஐ மேற்கொண்டார். இதற்கு உதாரணமாக - கடந்த **World Cup** ஐக் கூறலாம்.

ஆனால், தற்போது விக்கெட் காப்பாளராக இருப்பதால், துடுப்பாட்டத்தை மேம்படுத்த முடியாது என்று ட்ராவிட் கூறுவதில் நியாயம் இருந்தாலும்கூட, அப்படி விக்கெட் காப்பாளரை மாற்றினால், யாரை அணியிலிருந்து நீக்குவது என்பதுதான் பிரச்சினை. தினேஸ் மொங்கியா அண்மையில் பல போட்டிகளில் பெரிதாகச் சோபிக்காவிட்டாலும், பந்துவீச்சு, களத்தடுப்பு என்பவற்றில் பாராட்டும்படியாக விளையாடியுள்ளார். வளரவேண்டிய அந்த இளம் வீரரையும் அணியிலிருந்து நீக்க முாயாதநிலை. ஆனால், ட்ராவிட்டைப் பொறுத்தமட்டில், **Keeping** ஐ விட்டால், தனியே **Batting** ஐயே மேற்கொள்வார்.

**All Rounders** தேவைப்படும் இந்திய அணியில் - ட்ராவிட் தொங்குபாலத்தில் தான் இருப்பார். **Keeping** ஐ விட்டால், இறுதியில் அவருக்கே பாதகமாக அமைந்துவிடும் (வயதும் வேறு கூடிவிட்டது). பொறுத்திருந்து பார்ப்போம் ட்ராவிட்டா, பட்டேலா என்று...

வீ.ஏ.கோவி




களைப்பு மிகுதியால் பாரிஸ் சம்பியன் ஷிப் போட்டியில் Hettathalan தங்கம் வென்ற வீராங்கனை

* வட இந்து மகளிர் கல்லூரி
  1999 மாகாண மட்ட முதல் இடம்பெற்றபோது அதன் ஒரு அங்கத்தவர்.
* 2001 இல் 21 வயதிற்குட்பட்டோருக்கான உயரம் பாய்தலில், மாகாணமட்டப் புதிய சாதனை (1.45M) தேசியமட்டம் மூன்றாம் இடம்.
* 2001 இல் யாழ். மாவட்டத்தின் சார்பில், 400 மீற்றர் போட்டியில்1:05 செக்கனில் ஓடிப் புதிய சாதனை நிகழ்த்தியவர்.
* 2002 யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணியின் வீராங்கனை.
* களுத்துறை சமாதான தடகள யாழ்ப்பாணக் குழுவின் உபதலைவி.
* எல்லே, கரப்பந்தாட்டம், துடுப்பாட்ட பிரதேச செயலக அணித் தலைவர்.
* 2002 இல் மாகாண எல்லே அணியின் ஒரு அங்கத்தவர்.
* 21 வயதிற்குட்பட்ட தேசிய வலைப்பந்தாட்ட அணிக்காக 2002 இல் தெரிவு செய்யப்பட்டவர்.



வாழ்வில் மகத்தான கணம்

# எங்கள் பெருமை



சிறகடிக்க ஆசை

அண்மையில் இங்கிலாந்துக்குச் சென்றுதிரும்பிய தாயக வலைப் பந்தாட்ட அணியின் ஒரு அங்கத்தவர் தயாளினி செல்வராஜா. இவர், வலைப்பந்தாட்ட வீராங்கனை மட்டுமன்றி, சிறந்த தடகள வீராங்கனையுமாவார். வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி பெற்றெடுத்த பெருமைமிகு புதல்விகளுள் இவரும் ஒருவர் என்பதைத் தயக்கமில்லாமல் கூறமுடியும். மிகவும் அமைதியான சுபாபமுடைய தயாளினியுடன் கதைத்தபோது, அவர் தன் விளையாட்டுத் துறைகளில் திறமையை மென்மேலும் மெருகூட்டிக்கொள்ள விரும்புவது தெரிகிறது.

ஆனால், அதற்கான வழிவகைகள் எந்தளவிற்குச் சாத்தியம், எவ்வகையில் அதனைப் பெறலாம், யார் அதற்கு உதவுவார்கள் என்ற தெளிவு குறைவாகவே கொண்ட, ஆனால் திறமையான வீராங்கனை என்பதும் தெரிகிறது.

தனது பதினைந்து வயதில் வலைப்பந்தாட்டத்தைத் தொடங்கியவர். அதற்கு முன்னமேயே தடகள விளையாட்டுக்களில் பங்குகொண்டவர். 200 மீற்றர் ஓட்டம், 400 மீற்றர் ஓட்டம், உயரம் பாய்தல் போன்ற மூன்று நிகழ்வுகளையுமே சமமாக நேசிக்கும் இவர், தற்போது உயரம் பாய்தலில் கூடியகவனம் செலுத்துவதாகத் தெரிவிக்கிறார்.

சிலவேளைகளில், பாடசாலைப் பருவம் வரையில் திறமையாகச் செயற்படும் பல வீரர்கள் - அதன்பின் வழிதெரியாது, அப்படியே முடங்கிப் போவதைக் கண்டிருக்கிறோம். அதன்பின், அவர்களுக்கு வழி காட்ட வேண்டியது சமூகத்தின் பொறுப்பு. அந்தவகையில், தயாளினியின் வளர்ச்சியில் பெரும் பங்குகொண்டிருப்பது பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுச் சங்கம் என்பதை அவரே உறுதிபடக் கூறுகிறார்.

இக்கழகத்தினூடாகவே வலைப்பந்தாட்டத்தில் சிவகௌரி என்பவரின் பயிற்சி கிடைத்ததாகவும், தடகளத்துறையில் கிருபாவின் பயிற்சிகள் கிடைக்கப் போவதாகவும் கூறுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் தனது பயிற்சிகளைத் தொடர்வதிலுள்ள பல்வேறு தடங்கல்களை எடுத்துக்கூறுகிறார் தயாளினி. பொதுவாக யாழ்ப்பாணத் தடகள வீரர்கள் எல்லோருடனும் உரையாடும்போது, நாம் அறிந்துகொண்ட அதேவிடயங்கள் வரிசையாக வெளிவருகின்றன. இந்த வரிசையில், நமது மனதில் ஒன்றுபட்டது. எமது பிள்ளைகளை உயர்தரத்திற்குக் கொண்டு செல்வதாயின், சில அடிப்படைத் தேவைகளுக்கு நிதிவசதி அத்தியாவசியமானது என்பது மறுக்கமுடியாதது. ஆகவே, நிதிவளம் நிறைந்தவர்கள் எங்கள் திறமை நிறைந்த வீர, வீராங்கனைகளுக்கு நிறையவே உதவலாமே என்றுபட்டது.

இந்த வகையில், இங்கிலாந்தில் வாழும் ஒருவர், தனது தடகள நிகழ்வுகள் தொடர்பில் இங்கேயே பயிற்சிபெறத் தேவையான நிதி உதவிகளை அளிக்க முன்வந்திருப்பதைக் கூறினார். அந்த நல்ல மனதுக்கும், அதற்கு ஊடகமாக இருந்தவர்களும் நன்றிக்கு உரியவர்கள் அல்லவா.

இங்கிலாந்துப் பயணம் பற்றிய விடயங்களை உரையாடியபோது, இப்படி ஒரு சந்தர்ப்பம் தனக்கும், அணியினருக்கும் வாய்க்கும் என்று நினைத்தே இருக்கவில்லை என்பவர் - இதற்காகத் தமிழீழ விளையாட்டுத்துறையினருக்கு என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளதாகக்கூறும் இவர், இங்கிலாந்தில் தம்மை உபசரித்து, எல்லா வித வசதிகளையும் ஏற்படுத்திய அமைப்பினருக்கும் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார். இங்கிலாந்தில் மொத்தம் பதினெட்டு ஆட்டங்களில் ஈடுபட்டதாகவும், அதில் சுற்றுப்போட்டி ஆட்டங்கள் ஐந்திலும் வென்றதோடு, சிநேகபூர்வமான ஆட்டங்கள் பதின்மூன்றிலும் வெற்றி கண்டு, சாதனை படைத்ததைப் பற்றிப் பெருமிதமாகக் கூறுகிறார்.

தயாளினியின் குடும்பத்தில் மொத்த அங்கத்தவர்கள் ஐந்துபேர் மட்டுமே. இவர் மூத்தவர். அடுத்தது தம்பி, தங்கை. தங்கையும் சிறந்ததொரு வலைப்பந்தாட்ட வீராங்கனையாக வளர்ந்து வருவது தெரிகிறது. வட இந்து மகளிர் கல்லூரி மாணவியான குமுதினி, 17 வயதிற்குட்பட்ட வலைப் பந்தாட்ட அணி வீராங்கனையாக மாகாணமட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு, வியாங்கொடையில் நடைபெற்ற தேசியமட்ட வலைப்பந்தாட்ட போட்டிகளில் பங்குகொண்டவர். தயாளினியைப் பொறுத்தவரை, ஆழ்ந்த திறமைகொண்ட இவருக்குச் சரியான வழி காட்டல்களும், நெறிப்படுத்தல்களும், பயிற்சிகளும், எல்லாவற்றோடும் இணைந்து அனுசரணை உதவிகளும் இருந்தால், வலைப்பந்தாட்டம் மற்றும் 200 மீற்றர், 400 மீற்றர், சிறப்பாகத் தனது விருப்பு நிகழ்வான உயரம் பாய்தலில் ஒரு உயர் தகைமையைப் பெற்று, நம் மண்ணுக்குப் பெருமை தேடித் தருவார் என்பதில் சந்தேகமில்லை. ஒரு கை ஓசை எழுப்புவதில்லை. தயாளினிக்காகப் பல கைகள் ஒன்று சேரட்டும்.

**நிர்மலன்.**

# புதிய வார்ப்புகள்

டெஸ்ட் தரத்தில் அவுஸ்திரேலியா மட்டுமே தென்னாபிரிக்க அணியைவிட முன்னணியில் இருக்கிறது. அவுஸ்திரேலியா டெஸ்ட்தர வரிசையில் முதலாவது இடம். தென்னாபிரிக்கா இரண்டாம் இடம். அதேவேளை, கடந்த மாதம் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து சென்று, டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் பங்குகொள்ளப் போகிறது என்றபோது, யாரும் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. இதற்குக் காரணம் - தென்னாபிரிக்கா பலமானது என்பது தெரிந்த விடயம் என்பதைவிட, இங்கிலாந்து பல்வேறு துறைகளில் பலவீனமானது என்பதும் தெரிந்ததே.



அதிரடி அழகன் பிளின்டோவ்

நஸார் உசேனின் தலைமத்துவம் நிலைமாறும் காலத்தில் இருந்தமை, அநேகமாக எல்லா இங்கிலாந்து வீரர்களும் காயங்கள், உபாதைகள் வஞ்சகமில்லாமல் கொண்டிருந்தமை, மிகமுக்கியமாக சிறந்த பந்துவீச்சாளர்கள் இன்மை, பொதுவில் இங்கிலாந்துப் பயிற்றுநர் டங்கன் பிளெட்சர் - இங்கிலாந்து அணியைப் போட்டு உடைக்கிறார் என்று பரவலாகவே பிரபல கிரிக்கெட் ஜாம்பவான்கள் மற்றும் பத்திரிகைகளின் கண்டனம். இப்படியாக நிலமை இருக்கும்போது, யார்தான் இங்கிலாந்து அணிபற்றிப் பெரிதாகக் கவலைப்படப் போகிறார்கள்.

ஆனால், நடைபெற்ற ஐந்து டெஸ்ட் போட்டிகளும் திடீரென்று சர்வதேச கிரிக்கெட் சமூகத்தின் பார்வையை, இங்கிலாந்தின் பக்கம் திருப்பியது மட்டுமன்றி, இங்கிலாந்து பெருமைக்குரிய அணியாகவும் மாறிவிட்டது. அதிலும் சிறப்பாக இறுதியும், ஐந்தாவதுமான டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து அபாரமாக விளையாடியது மட்டுமன்றி, தென்னாபிரிக்காவை அநாயாசமாக வீழ்த்தி, டெஸ்ட் தொடரை 2:2 என்று சமப்படுத்தியது.

இந்த வெற்றியானது இங்கிலாந்தின் புதிய தலைவர் மைக்கல் வோனுக்குப் பெருமை தருவது தான். ஆனால், இங்கிலாந்து ரசிகர்கள் எதையுமே சரியாக எடைபோடுபவர்கள்தான். சில வருடங்களுக்கு முன்வரை இங்கிலாந்தின் தேசிய அணி என்பது, ஒரு இங்கிலாந்தின் கவுண்ரி அணியைவிடப் பெரிதாக ஒன்றும் சாதிக்கக் கூடியதானதல்ல என்று கேலிப் பேச்சுக்குள்ளானது. ஆனால், அப்படியானநிலையில் இருந்த அணியை, இன்று இந்தளவிற்கு வளர்த்தெடுத்தவர் நஸார் உசேன்தான் என்பதில் யாருக்கும் இரண்டு கருத்திற்கு இடம் இல்லை. மைக் பிரெயர்லீ- இங்கிலாந்து அணித் தலைவராக இருந்தபின், அடுத்த சிறந்த அணித் தலைவர் நஸார் உசேன்தான் என்ற கருத்துக்கூட முன்வைக்கப்படுகிறது.



கிரேம் ஸ்மித் - மைக்வோன் சமமானவர்கள்

ஐந்தாவது டெஸ்ட் - ஓவல் மைதானத்தில் ஆரம்பித்தபோது, தென்னாபிரிக்கா பெரிதாக தனக்குள் குழப்பமடைய வேண்டிய தேவையே இருந்திருக்காது. ஏனெனில், அவர்கள் குவித்த ஓட்டங்கள் 484, இதில் கிப்ஸ் 183, காரி கேர்ஸ்ரன் 90, மெக்கன்ஸி, பொல்லொக் இருவரும் தலா 66 என்று ஓட்டங்கள் சேர்த்தனர். இந்தநிலையில், சில பத்திரிகைக் குறிப்புக்கள் - ஐந்தாவது டெஸ்ட் DRAW ஐ நோக்கிச் செல்கிறது. தென்னாபிரிக்கா 2:1 என்று தொடரை வெல்லும். சிலவேளை 3:1 ஆகக்கூட இருக்கலாம் என்று எதிர்வு கூறின. ஆனால், இங்கிலாந்து தனது முதலாவது இனிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 604 ஓட்டங்கள் பெற்று, ஆட்டத்தை நிறுத்தும் அளவிற்கு தைரியம்பெற்ற அணியாக இருக்கும் என்று, கிரேம் ஸ்மித் நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டார். இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கையில் டிரெய்ஸ் கொதிக் 219, தோர்ப் 124, பிளிண்டோபின் கவர்ச்சிகரமான 95 என்பன அடங்கும். இதைத் தொடர்ந்து இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த தென்னாபிரிக்கா, 229 ஓட்டங்களுக்கு சுருண்டபோது, இங்கிலாந்தின் மகத்தான வெற்றி உறுதியாயிற்று. இறுதியாக ஒரேயொரு விக்கெட்டை மட்டும் இழந்து, இங்கிலாந்து 110 ஓட்டங்களைப் பெற்றபோது, இங்கிலாந்து - தென்னாபிரிக்காவை ஒன்பது விக்கெட்டுக்களால் தோற்கடித்திருந்தது. ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை 2:2 என்று சமன் செய்திருந்தது. இங்கிலாந்தின் கிரிக்கெட் உயிர்ப்படைந்தது.

இனி இங்கிலாந்து - வங்களாதேசத்துக்கு வரப்போகிறது. இலங்கைக்கு வரப்போகிறது. தேவ் வட்மோருக்கும், இங்கிலாந்துக்கும் ஒரு கயிறிழுத்தல் போட்டி நடைபெறத்தான் போகிறது. அதேபோல, இலங்கை தன் வீட்டில்தானே ஆட்டம் என்று இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், இங்கிலாந்து புதிதாகப் பிறந்திருக்கிறது.

**வடிவுக்கரசி**

# சிறகடிக்கும் சுஜீவா நில்மினி

பதினைந்தாவது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் சுசந்திகா ஜயசிங்க கலந்துகொள்ள இயலவில்லை என்பது ஒரு பெருத்த நம்பிக்கையைச் சிதறடித்திருந்தது. எனினும், தமயந்தி தர்ஷா பிலிப்பைன்சுக்குப் போவதற்குத் தயாரானதும், 400 மீற்றர் பெண்கள் நிகழ்வில் இலங்கைக்கு ஒரு தங்கம் என்பது உறுதி என்றே நம்பப்பட்டது. ஆனால், அதிர்ச்சிகரமாக 400 மீற்றர் ஆரம்ப இடத்திற்குச் சென்ற தமயந்தி தர்ஷா, திடீரென தன்னால் ஓட முடியவில்லை என்று பின்வாங்கியது இலங்கை முகாமில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது பற்றிக் கருததுக்கூறிய அதிகாரி ஒருவர்- அண்மைக்காலத்தில் இலங்கை தடகள வீரர்கள் பலர், இறுதிநேரத்தில் போட்டிகளில் இருந்து விலகிக்கொள்வதற்காகக் கூறும் பழக்கம் ஒன்றைப் பின்பற்றுகிறார்கள். ஆனால், தர்ஷா தடத்தில் வந்து நின்றபின், பின்வாங்கியது மிக அதிர்ச்சிகரமானது என்று தெரிவித்துள்ளார். இருந்தும் இலங்கைத் தடகள முகாமில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைக்குக் காரணம் தெரியவில்லை. 4x100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் தர்ஷாவும் ஒருவர். ஆனால், அந்நிகழ்வில் அவர் பங்குபற்றுவாரா? இல்லையா? என்பது பற்றி இதுவரையும் எந்தவொரு கருத்தையும் கூறவில்லை.



மெல்லெனப் பாயும் தண்ணீர்

இதேவேளை, இலங்கைக்கு ஒரு ஆறுதலாக சுஜீவா நில்மினி ஜயசேன - பெண்களுக்கான 10000 மீற்றர் ஓட்டப்போட்டியில் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம் பெற்றுக்கொடுத்துள்ளார். இவர் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த குருவிட்ட எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது சாதனையின் முக்கியத்துவம் என்னவெனில்- இவர் தனது முழுவோட்டத்தையும் வெறுங்காலுடனேயே ஓடி முடித்தார் என்பதுதான். பத்தாயிரம் மீற்றர் பெண்கள் பிரிவில் முதலிடம் பெற்றவர்- பாரிஸ் ஓப்பன் சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெண்கலப் பதக்கம் பெற்ற சீனாவின் சுன்யின்ஜீ. வெண்கலப் பதக்கம் வென்றவர் இந்தியாவின் அருணாதேவி.

**ஜோதி.**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பகைஅகத்துச் சாவார் எளியர் அரியர்*
*அவைஅகத்து அஞ்சா தவர்.*

\- திருக்குறள்-

## நமது நோக்கு

# ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு; அரச பயங்கரவாதிகளுக்கு பேரிடி!

சிறிலங்காவில் சிங்களப் பேரினவாதச் சிந்தனை கொண்ட அரசியல் மற்றும் மத பீடத்தைச் சாாந்தவர்களுக்கும் ஏனைய பேரினவாத அமைப்புக்களுக்கும் அண்மைக்காலங்களில் பல தொடர்ச்சியான அதிர்ச்சியும் - சினமும் தரும் ஏமாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமேயுள்ளன.

இத்தகைய ஏமாற்றங்கள் அவர்கள் ஒருபோதுமே எதிர் பார்க்காததும், கற்பனை செய்யாததுமாகும்.

நான்கு தசாப்தத்திற்கும் மேலாக தொடர்ந்துவரும் சிறிலங்காவின் இனப்பிரச்சினையின் ஆதிமூலமான, பேரினவாத ஆட்சியில் கோட்பாடானது சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிராக, குறிப்பாக - தமிழ்மக்களுக்கு எதிராக காலங்காலமாக மேற்கொண்டு வந்த இன ஒடுக்கம் கொள்கைகளின் உச்சக்கட்ட நடவடிக்கையான, இராணுவ ரீதியிலான அனுகுமுறைகளின் எதிரொலியே தமிழ்மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டமாக எழுச்சி கொண்டது.

இந்தச் சுதந்திர எழுச்சியை - அரச பயங்கரவாத்திற்கெதிரான விடுதலைப் போராட்டத்தினை, பயங்கரவாதப் பிரச்சினையாக கருத்துருவம் கொள்ளவைத்து, அதன்மூலம் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக சர்வதேச சமூகம் அடையாளப்படுத்தவென, கடந்த ஒரு தசாப்த காலப் பகுதிக்குள் சிறிலங்காவை ஆட்சி செய்த அரசுகள் தீவிர முனைப்புடன் செயற்பட்டு வந்துள்ளமை தெரிந்த விடயமே.

முதலில் விடுதலைப் புலிகளால் பயங்கரவாதிகளாகவும், இனப்பிரச்சினையை பயங்கரவாதப்பிரச்சினையாகவும் பரந்தளவில் பிரசாரம் செய்யும் நடவடிக்கைகளை திட்டமிட்டு செயற்படுத்தத் தொடங்கியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே. அவர் சார்பின் இந்தக் கைங்கரியத்தை மேற்கொள்ளத் தொடங்கியவர் அப்போதைய தேசிய பந்தோபஸ்து அமைச்சரான லலித் அத்துலத் முதலியே ஆவார்.

அதன்பின்னர், பிரேமதாஸ காலத்தில் ரஞ்சன் விஜேரத்ன அதனைத் தொடர்ந்தார்.

பிரேமதாஸவை அடுத்து, ஆட்சிப்பீடம் ஏறிய விஜேதுங்க தானே வெளிப்படையாக சிறிலங்காவில் இனப்பிரச்சினையென எதுவும் கிடையாது. பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உள்ளது என, சர்வதேச சமூகத்திற்கு உரத்துப் பிரகடனம் செய்ய முற்பட்டார்.

இந்தப் பயங்கரவாதத்துக்குக் காரணமான பயங்கரவாதிகளாக, விடுதலைப் புலிகளை சுட்டிக்காட்டியது பேரினவாதம்.

இந்தியாவின் விடுதலைப் புலிகள் மீதான தடை நடவடிக்கையை ஆதாரமாகக் கொண்டு ஏனைய சர்தேச நாடுகளும் அதனைத் தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கத் தொடங்கியது சந்திரிகா அரசாங்கமே.

1994 களின் மத்திய பகுதியில், சமாதானப் பேரிகை கொட்டிக்கொண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகாவின் போலிச் சமாதானத் தேவதை வேஷம் கலைய மூன்றாம் ஈழப்போர் ஆரம்பமானதும் அந்தப் போரினை சமாதானத்திற்கான யுத்தம் என்று விளக்கமளித்த சந்திரிகா அதனை பயங்கரவாத்திற்கும், பயங்கரவாதிகளுக்கும் எதிரான போர் என்றும் வரைவிலக்கணம் வகுத்தார்.

இந்தக் கட்டத்தில் - மூன்றாம் ஈழப்போர் தீவிரம்கொள்ள ஆரம்பித்ததும் அதாவது, போரின் ஆரம்பகால - தற்காலிக வெற்றிகளால் அகங்காரம் கொண்ட சந்திரிகா, பிற்கால தொடர் தோல்விகளும் பின்னடைவுகளும் அழுத்தத்தை மேற்கொள்ளத் தொடங்கியதும், போரில் வெற்றிகொள்ள முடியாத நிலை அதிகரிக்க, அதிகரிக்க விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் முனைப்புடன் மூலோபாயங்களை வகுக்கலானார்.

சர்வதேச நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகத்தவரின் நிதி மற்றும் ஆதரவுப் பின்பலமே புலிகளின் வெற்றிகளின் மூலபலம் என நினைத்த சந்திரிகா - கதிர்காமர் தலைமையில் விடுதலைப் புலிகள் எதிர்ப்பு பிரசாரத்தை பல மில்லியன் ரூபா செலவில் ஆரம்பித்தார்.

சர்வதேச மேலாதிக்க சக்திகளின் இராணுவரீதியான ஆலோசனைகள் ஆயுத உதவிகள், போர்மூலோபாயத் திட்டமிடல்கள் ஆகியவற்றின் துணையுடன், சிறிலங்கா அரசு மேற்கொண்ட யுத்தம் தொடர் தோல்விகளை சந்தித்தமையால், அந்த மேலாதிக்க சக்திகளும் அச்சம் கொண்டிருக்கவேண்டும்.

கதிர்காமரின் 'அபாயச் சங்கூதல்' நடவடிக்கைகள், சந்திரிகாவுக்கு சாதகமான பலன்களை ஏற்படுத்தியது.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா என மேற்குலக அமெரிக்க சார்பு நாடுகள் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்து அவர்களின் நடவடிக்கைகளுக்கு தத்தம் நாடுகளில் தடைகளை விதித்தன.

அது - அரச பயங்கரவாத்திற்கும் பேரினவாதத்திற்கும் மேற்குலகம் வழங்கிய அநீதியான அங்கீகாரமாயிற்று.

ஆனால், சந்திரிகாவின் ஆட்சி தேர்தல் தோல்வியால் பதவியிழந்தபோது ஏற்பட்ட சமாதான - போர்நிறுத்த சூழலும், புரிந்துணர்வு உடன்பாடும் அதனைத் தொடர்ந்த பேச்சுவார்த்தைகளும், அதற்கான சர்வதேச ஆதரவும் நிலைமையைத் தலைகீழாக மாற்றியது.

புலிகளைத் தடைசெய்த நாடுகளும் அவர்களை வன்னிக் காட்டுக்குச் சென்று சந்தித்து கைகுலுக்கி பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டபோது, பேரினவாதிகள் பிரமித்துநின்றனர். சிலநாடுகள் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து பரிசீலிப்பதாகவும் அறிவித்தன.

இந்தநிலையில் ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் வெளியிட்ட பயங்கரவாதப் பட்டியலில் புலிகளின் பெயர் சேர்க்கப்படாதது சிங்களப் பேரினவாதிகளுக்கு கிடைத்த மரண அடியாகவே உணரப்படுகிறது.

'தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும்
தர்மம் மறுபடியும் வெல்லும்' - என்ற கீதையின் வாசகம் தான் தற்போது நினைவுக்குவருகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த முடிவு குறித்து பேரினவாதிகள் விசனமும், சினமும், ஏமாற்றமும் அடைந்துள்ளார்களாம்.

எப்படியோ சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் நிஜமுகம் சர்வதேச சமூகத்தால் இனங்காணப்பட்டுவருவதை உணரக் கூடியதாக உள்ளது. இது விடுதலைப் புலிகளுக்கு கிடைத்துள்ள மற்றொரு அரசியல் வெற்றியேயாகும்.

## நாடும் நடப்பும்



செய்தி : ஜே.வி.பி - சுதந்திரக் கட்சி கூட்டணி
மீண்டும் கலந்துரையாடல்

# அதிகாரத்தை பரவலாக்கா விட்டால் நாடு பிளவுபடுவதை தடுக்க முடியாது

## அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க

(கொழும்பு)

அதிகாரத்தைப் பரவலாக்கவில்லை என்றால், நாடு பிளவுபடுவதைத் தடுக்கமுடியாது போய்விடும். அதிகாரத்தைப் பரவலாக்காத காரணத்தாலேயே - இந்தியா, பாகிஸ்தான் முதலான சர்வதேச நாடுகளுக்கும் இலங்கைப் பிரச்சினை சென்றுள்ளது. ஆகவே - நிதி, காணி, காவல்துறை அதிகாரங்களைப் பரவலாக்கி வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கத் தீர்வுகாணப் படவேண்டுமென விவசாய கால்நடை அபிவிருத்தி சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மட்டக்களப்பில் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள செல்வநாயகம் கூட்டுறவுக் கலையரங்கில் நேற்று நடைபெற்ற விவசாய மாநாட்டில், பிரதம் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது, அரசாங்கம் பதவிக்கு வந்தபோது திறைசேரியில் வங்குறோத்து நிலையே இருந்தது. சமாதானச்சூழல் ஏற்பட்டதன் விளைவாக உலக நாடுகள் நிதி வழங்கத் தயாராக இருக்கின்றன.

வடக்கு - கிழக்குப் பிரச்சினையின் தீர்விலேயே, இந்த நாட்டின் அபிவிருத்தி தங்கியிருக்கின்றது. ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்தபோது, தமிழ்மக்கள் மிகுந்த எதிர்பார்ப்பில் இருந்தார்கள். அதிகாரத்திற்கு வந்த ஜனாதிபதி தான்தோன்றித்தனமாக நடக்க ஆரம்பித்தார்.

இதன்காரணமாக, வெறுப்படைந்த மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் கையில் ஆட்சியை ஒப்படைத்திருந்திருக்கிறார்கள்.

இந்த நாட்டில் இருக்கின்ற இரண்டு பிரதான கட்சிகளும், ஒன்றிணைந்து அதிகாரப் பரவலாக்கல் செய்ய முன்வர வேண்டும். காணி, நிதி, காவல்துறை அதிகாரம் உடைய இடைக்காலப் பரவலாக்கல் ஒன்று வடக்கு - கிழக்கில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதிலேயே உலக நாடுகள் ஆர்வமாக இருக்கின்றன.

எனவே, அரசும் விடுதலைப் புலிகளும் திறந்த மனதுடன் பேசி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். இதற்கு எதிர்க்கட்சியும் ஒத்துழைக்கவேண்டும்.

அதிகாரத்தைப் பரவலாக்கி இனப்பிரச்சனைக்கு தீர்வு காணவில்லை என்றால், நாடு பிளவுபட்டுப்போய்விடும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

விவசாய கால்நடைத் துறைகளை அபிவிருத்தி செய்வதற்கும், பத்து ஆண்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அமைச்சின் செயலாளர் தொடக்கம் விவசாயிகள் வரைக்கும் விஸ்தரிக்கப்படும்.

யுத்தம் நடைபெற்ற காரணத்தினால் வடக்கு - கிழக்கில் சமுர்த்தி சரியாக அமுல்படுத்தப்படாதபோதும், அது தற்போது முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த வைபவத்தில் - மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிர்வாகப் பொறுப்பாளர் பிரபா, துணை அரசியற்பொறுப்பாளர் கிருஷன், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கா.கிருஸ்ணபிள்ளை உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

# பல்கலைக்கழக மாணவர் மோதல்; அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## தினேஷ் குணவர்த்தன கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்க்லைக்கழகத்தில் மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் பற்றி, அரசு நடவடிக்கை எடுக்காது விட்டால், பல்கலைக்கழக சம்பந்தமான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து எதிர்க்கட்சிகள் ராஜினாமா செய்வார்கள் என, நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக, எதிர்க்கட்சிகள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும், பல்கலைக்கழக வளாகத்தில் கொலைகாரர்கள் ஒரு பிரிவினர் நுழைந்து மாணவர்களைத் தாக்கியுள்ளார்கள் என்றும், தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# நாட்டின் பாதுகாப்பு நிலைமை பற்றி நாடாளுமன்றில் விவாதிக்கப்படும்!

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தை, ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி நடாத்துவதற்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நடைபெற்ற கூட்டுத் தலைவர்களின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தக்குள்ளாக்கி இருக்கிறது என்று, நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றில் விவாதம் ஒன்று நடைபெற வேண்டுமென்று, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்ததை அடுத்தே, இந்த விவாதம் இடம்பெறவுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமாக, பொலிஸ் மா அதிபரால் விதந்துரைக்கப்பட்ட பல ஆலோசனைகள் தமக்குக் கிடைத்திருப்பதாக சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

# பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரிப்பு!

## சட்டத்தரணி சஞ்சித் அபேசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக சட்டத்தரணி சஞ்சித் அபேசூரியா தெரிவித்துள்ளார்.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவில் கிடைத்துள்ள முறைப்பாடுகளில் அதிகமானவை - பொலிஸாருக்கு ஏதிராக மக்கள் கொடுத்த முறைப்பாடுகளே எனவும் சஞ்சித் அபேசூரியா தெரிவித்தார்.

இதேவேளை - பொலிஸ் அதிகாரிகள் தரத்தில் உள்ளவர்களுக்கு எதிராகப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொடுத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாகச் சட்டத்தரணி தெரிவித்தார்.

இவ்வாறு சுமத்தப்பட்டட குற்றச்சாட்டுகளுக்குரிய விசாரணைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படும் எனவும், அவர்களுக்குரிய தண்டனை வழங்கப்படும் எனவும் தெரிவித்த சட்டத்தரணி சஞ்சித் அபேசூரிய, சட்டத்தின் முன்னர் யாவரும் சமனானவர்கள் என்பது இதன்மூலம் உறுதிப்படுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

# அரசின் வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிக்க நினைக்கும் எதிர்க்கட்சி

நாடு இனப்பிரச்சினைத்தீர்வு விடயத்தில் முனைப்புகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு எதிர்ப்புக்களின் மத்தியிலும், இந்தத் தீர்வு விடயங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தநிலையில் -பல்வேறு துறைகளிலும், அரசாங்கம் பலதரப்பிலும் எதிர்ப்புகளை எதிர்நோக்கி வருகின்றது.

போர் காரணமாக - நாடு நிதிநெருக்கடியைச் சந்தித்துள்ளது. இது பொதுஜன ஐக்கிய



முன்னணி அரசாங்கமும், ஐக்கிய தேசியக் கட்சியும் எதேச்சையாக மேற்கொண்டுவந்த யுத்தமே, இந்த நிதி நெருக்கடி நிலைக்குக் காரணம் என்பதை மறுக்கமுடியாது.

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும், பொதுஜன ஐக்கிய முன்னணியும், நாட்டின் வளங்கள் அனைத்தையுமே பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர் ஒன்றை நடத்தி வந்தன.

அந்தப் போர் - வெற்றிபெறமுடியாத போர் எனத் தெரிந்தும்கூட, தென்னிலங்கையில் தமது அரசியல் நகர்வை மேற்கொள்வதற்காக, இந்த இரண்டு கட்சிகளும் போரை முனைப்புடன் மேற்கொண்டன.

வெளிநாடுகளிலிருந்து அபிவிருத்திக்காக நிதிகளைப்பெற்று, அவற்றையும் யுத்தத்திற்குச் செலவிட்டன. முன்யோசனையில்லாமல் அந்த இரண்டு கட்சிகளும் மேற்கொண்ட நகர்வுகள், ஒருகாலகட்டத்தில் தென்னிலங்கையில் எவ்வித பாதிப்புகளையும் ஏற்படுத்தியிருக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தன மற்றும் பிரேமதாஸ ஆகியோரின் முதற்கட்ட பதவி காலத்தின்போது, அவர்கள் இருவரும் வடக்கு-கிழக்கு யுத்தத்தை, அந்தப் பிரதேசங்களிலேயே மட்டுப்படுத்தி வைத்திருப்பதில் வெற்றிகண்டனர். தென்னிலங்கையில் அவர்கள் தமது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும், யுத்தத்தைக் காரணங்காட்டி, தமது ஆதரவாளர்களாக வைத்துக் கொள்வதற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை - பயங்கரவாதப் போராட்டமாகச் சித்திரித்துக் காட்டுவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டன.

ஆனால், பிரேமதாஸவின் இரண்டாவது ஜனாதிபதி பதவி காலத்தில், இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. யுத்தம் காரணமாக, தமிழர்கள் மாத்திரமே பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமைமாறி, தென்னிலங்கைச் சிங்களவர்களும் பாதிக்கப்படும்நிலை உருவானது.

இது ஜனாதிபதி பிரேமதாஸசுக்குப் பாரிய அரசியல் நெருக்கடியைக் கொடுத்தது. இந்த நிலையில், அவரின் மறைவை அடுத்து, பதவிக்கு வந்த ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க- தனது காலத்தை எப்படியாவது கடத்திவிட வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்டுச் சென்றார். அவருடன், ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட அசைக்கமுடியாத ஆட்சி - ஆட்டம் கண்டது.

அடுத்த கட்டமாக, ஐக்கிய தேசியக் கட்சியைக் கொண்டுசெல்வதற்கு, இன்றைய பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அன்று வாய்ப்போ அல்லது உரிய பக்குவமோ இருக்கவில்லை. அவரைத்தவிர, கருஜெயசூரிய, டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, டிரோன் பெர்னாண்டோ, ஜோன் அமரதுங்க போன்ற முக்கிய உறுப்பினர்கள் - ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தபோதும், அவர்களால் கட்சியை நகர்த்திச்செல்ல முடியவில்லை. எனவே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தி, இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சியைக் கைப்பற்றினார்.

இந்த ஆட்சி மாற்றத்தை இந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், வடக்கு-கிழக்குப் போரைத் திட்டமில்லாமல் நடத்தி, அதன்மூலம் எந்தத் தென்னிலங்கை மக்கள் மத்தியில் எதிர்ப்பைப் பெறக்கூடாது என, ஐக்கிய தேசியக் கட்சியினர் நினைத்தார்களோ, அந்தத் தென்னிலங்கை மக்களே - ஐக்கிய தேசியக் கட்சியின்மீது எதிர்ப்பை வெளிப்படுத்திவிட்டனர்.

இந்த அனுபவம் - அடுத்த பதவிக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகாவுக்குப் பயன்படும் என, அரசியல் தரப்புகளில் கருத்து நிலவியபோதும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால், இந்த அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்ளமுடியவில்லை.

சந்திரிகா ஆட்சிக்கு வந்ததுமுதல், நாடு யுத்தம் ஒன்றில் ஈடுபட்டிருப்பதால், அதன் பாதிப்புகள் தென்னிலங்கையிலும் பிரதிபலிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டியே வந்தார். அவர் நிதியமைப்புத் தொடர்பான பாதிப்பையே பெரும்பாலும் அவர் மறைமுகப் பாதிப்பாகக் கூறி வந்தார். ஆனால், அவரின் ஆட்சியில், யுத்தத்தை நடத்திய இராணுவ தலைமைகள் மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் - ஜனாதிபதியின் நிதி தொடர்பான கருத்தை மாற்றி, யுத்தத்தின் நேரடிப் பாதிப்பையே தென்னிலங்கைக்குக் கொண்டுவந்தனர். இதன் காரணமாக, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தைக் காட்டிலும், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலம், ஆரம்பம் முதலே வடக்கு-கிழக்கு மக்களுக்கும், தென்னிலங்கை மக்களுக்கும் அதிருப்தியைக் கொண்டுவந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிக்காலத்தைக் காட்டிலும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலததிலேயே- கொழும்பிலும் ஏனைய தென்னிலங்கைப் பகுதிகளிலும் - தமிழீழ விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக, பொருளாதார இலக்குகள் மீதான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் வடக்கு-கிழக்கு யுத்தத்தைத் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமாக நடத்தி வந்தனவே தவிர, நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி, அந்தக் கட்சிகள் கவலை கொள்ளவில்லை. ஆனால், இந்த எதேச்சைப் போக்கு - பொதுஜன ஐக்கிய முன்னணியில், மக்கள் ஆதரவில் வீழ்ச்சிக்கு வழிவகுத்த அதேநேரம், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததுமுதல், அந்தக் கட்சிக்குப் பாரிய சோதனையை ஏற்படுத்தியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்து, ஒன்றரை வருடமாகிவிட்டநிலையில், அந்தக் கட்சி - நாட்டின் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக, பாரிய சங்கட நிலைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது.

நாள்தோறும் பணிநிறுத்தப் போராட்டமும், மறியற் போராட்டங்களும் நாட்டில் எங்கோ ஒரு மூலையில் நடந்துகொண்டேயிருக்கின்றன. அனைத்தும் - சம்பள உயர்வு, போதிய அல்லது சலுகைகளைக் கோரிய தொழிற்சங்கப் போராட்டங்களாகவே நடைபெற்றுக் கொணடிருக்கின்றன. முன்னர் தொழிற்சங்கப் போராட்டங்கள் யாவும், இலங்கையைப் பொறுத்தமட்டில் உரிய தீர்வுடன் நிறைவு செய்யப்பட்டு வந்தன.

ஆனால், தற்சமயம் தொழிற்சங்கப் போராட்டங்கள் ஏதாவது இடம்பெற்றால், அவை நாட்டின் நிதிநிலையைக் கருதி, தற்காலிகத் தீர்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இந்தத் தற்காலிக தீர்வு விடயம் நீண்டகாலத்தில் பாரிய பிரச்சினைக்கு வழிவகுத்துள்ளது. தோட்டத் தொழிற்துறையில் மாத்திரமே முன்னர் தீவிர தொழிற்சங்கப் போராட்டங்கள் இடம்பெற்று வந்தன.

எனினும், அவை அரசாங்கத்துடன் ஒத்திசைந்து செல்லும் தொழிற்சங்கங்களின் துணையுடன், தற்காலிகமாகத் தீர்க்கப்பட்டு வந்தன. ஆனால், இன்று நாட்டின் அனைத்து தொழிற்துறைகளிலும் இந்தப் போக்குக் காணப்படுகிறது.

தோட்டத் தொழிற்துறையில் இன்னமும் நாள் சம்பளமுறையே நடைமுறையில் இருக்கிறது. அதுவும் வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கேற்ப அதிகரிக்கப்படுவதில்லை.

இதன் காரணமாக அந்தத் தொழிற்துறை மக்கள் - இன்னமும் நிதிநிலவரங்களில் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வருகின்றனர். மாறாக, அரசாங்கத்துறை ஊழியர்கள் வாழ்க்கைச் செலவுப்புள்ளியுடன்கூடிய சம்பளத் திட்டத்தை, வருடா வருடம் பெற்றுத் வருகின்றனர். இருப்பினும், கடந்த வருடம் அந்த ஏற்பாட்டை அவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கமுடியவில்லை. திறைசேரியில் உரிய நிதிவளம் இல்லாமையே இதற்கான பிரதான காரணமாகும்.

கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியின் இறுதிப் பகுதியில், இன்று நாட்டில் காணப்படும் பொருளாதாரநிலையே நிலவியது. ஆனால், அதனைப் பொதுஜன ஐக்கிய முன்னணி - மக்களிடம் நேரடியாகக்கூறப் பயந்தது. ஏனெனில், குறுகிய காலத்துக்குள் தேர்தல் ஒன்று வரவிருந்தமையால், இந்த உண்மையைக் கூறப்போனால், வாக்காளர்கள் தமக்கு எதிராகச் செயற்படுவார்களோ என்ற அச்சம் காரணமாக, பொதுஜன ஐக்கிய முன்னணி - திரைசேரியின் முழு நிதிவளங்களையும் பயன்படுத்தி, அரசாங்கத்துறையினருக்குச் சம்பள உயர்வுகளை வழங்க முற்பட்டது. அவ்வாறு வழங்கமுடியாத வேளைகளில், தமது கட்சிக்குத் தேர்தல் வெற்றியைப் பெற்றுக்கொள்ளும் ஒரேநோக்கில், திரைசேரியின் நிதிநிலைமையையும் கவனிக்காது, அரசாங்கத்துறையில் ஆட்சேர்ப்புக்களை மேற்கொண்டது. இதன்காரணமாகப் பின்னால் வரும் பொருளாதாரச் சிக்கல்நிலையை, அந்தக் கட்சி பெரிதும் கவனத்திற்கொள்ளவில்லை. அடுத்துவரும் ஆட்சி, ஐக்கிய தேசியக் கட்சியினுடையது. எனவே, அது அதனைச் சமாளித்துக்கொள்ளட்டும் என்ற எண்ணம் போலவே, இன்று ஐக்கிய தேசியக் கட்சி, தொழிற்சங்கப் பிரச்சினைகளைக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்த தொழிச்சங்கப் பிரச்சினைகள் யாவும், ரோக்கியோவில் இணங்கிக் கொள்ளப்பட்ட நிதியுதவிகள், இலங்கைக்கு வர ஆரம்பிக்கும்போதே, தீர்க்கலாம் என்பது யதார்த்தம்.

அதுவரைக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தலைவலி தொடரவே செய்யும். கடைசியாகச் சுகாதார ஊழியர்கள் மேற்கொண்டுவரும்

## தெற்குத் திசையினிலே...

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

போராட்டம், அரசாங்கத்தைச் சற்றுப் பயங்கொள்ளச் செய்திருக்கிறது. என்றாலும், மக்கள் சேவை என்ற நிலைப்பாட்டில் இராணுவத்தினரைக் கொண்டு, வைத்தியசாலைகளின் இயல்புப் பணிகளை ஓரளவுக்கேனும் மேற்கொள்ள அரசாங்கத்தினால் முடிந்திருக்கிறது.

தென்னிலங்கையில் தொழிற்சங்கப் போராட்டத்தைத் தவிர, அரசாங்கத்திற்கு இன்று ஆட்சியின் நிலையின்மையும், அச்சத்தைக்



கொடுத்திருக்கிறது. எதிர்வரும் மூன்று மாத காலப்பகுதி - இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முக்கிய காலப்பகுதி என, தேர்தல் ஏற்பாட்டாளர்கள் அண்மையில் தெரிவித்திருந்தனர். அது யாதார்த்தமே.

இடைக்கால நிர்வாகம் குறித்து, பேச்சுவார்த்தைகள் இடம்பெறவிருக்கின்றன. எனவே, அடுத்துவரும் மூன்று மாதகாலப்பகுதித் தீர்மானம் - பிக்கு காலப்பகுதியாகவே அமையப் போகிறது. இதேவேளை, அரசாங்கம் அடுத்த மூன்று மாதகாலப்பகுதிக்குள், தமது அமைச்சர்களில் சில மாற்றங்களை ஏற்படுத்தும் என நம்பகரமாகத் தெரியவந்திருக்கிறது.

தற்சமயம் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களின் எண்ணிக்கை எ்ழுபதாகும். இதனை எண்பத்து ஐந்தாக உயர்த்தப் பிரதமர் ஒப்புதல் வழங்கியுள்ளார். பிரதமர் - நியூயோர்க்கிற்குப் புறப்படும் முன்னர், இதற்கான உத்தரவைக் கட்சியின் தவிசாளர் மாலிக் சமரவிக்ரமவிற்கு விடுத்துள்ளார். இந்தப் பதினைந்து அமைச்சர்களில், எவரும் அமைச்சரவைக்குத் தெரிவுசெய்யப்படமாட்டார்கள் என்றபோதும், அவர்களுக்கு அமைச்சரவை அமைச்சர்களின் பொறுப்புக்களிலிருந்து பல பொறுப்புக்கள் பகிர்ந்து கொடுக்கப்படவிருக்கின்றன. எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி, ஐக்கிய தேசியக் கட்சி, தனது இரண்டாவது வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கிறது. இதற்கு முன்னர் சில அபிவிருத்தி முன்நகர்வுகளை மேற்கொள்ளலாம் என, எண்ணங்கொணடுள்ள பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, வரவு-செலவுத்திட்டம் எந்த ஒரு தருணத்திலும் தோற்கடிக்கப்படக்கூடாது என்பதில் கவனமாக இருந்து வருகிறார். பொதுஜன ஐக்கிய முன்னணி - ஐக்கிய தேசிய கட்சியின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கும் நகர்வுகளை எடுத்து வருகிறது. அதற்காக அந்த முன்னணி, ஐக்கிய தேசிய கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப்பிடிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே, பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்துகொள்ளக்கூடியவர்களுக்கு, அமைச்சர்கள் நிலையை வழங்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை தீர்மானித்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி - மாற்றுவழி ஒன்றையும் வகுத்துள்ளது. ஏற்கனவே கூட்டமைப்பை அமைப்பதில் தோல்விகண்ட மக்கள் விடுதலை முன்னணியுடன், பொதுஜன ஐக்கிய முன்னணி - ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தைத் தோற்கடிகச் செய்யும் ஒத்துழைப்புக்காகப் போச்சுவார்த்தை நடத்தி வருகிறது. ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேனவும், மக்கள் விடுதலை முன்னணியின் செயலர் டில்வின் சில்வாவும் இது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர். தேசிய இனப்பிரச்சினைத்தீர்வு விடயத்தில் இணக்கம் இன்மையால், கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொள்ளமுடியாதுபோன இந்த இரண்டு கட்சிகளும் - ஐக்கிய தேசிய கட்சி எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதைப் பிரதான இலக்காகக் கொண்டுள்ளன.

இது இவ்வாறிருக்க, பிரதமர் தொடர்பில் கொழும்பில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள், அரசாங்கத்தின் பிரதான அமைச்சர்கள் இருவரின் பணிப்பின் பேரிலேயே அச்சிடப்பட்டதாக, எதிர்க்கட்சித் தரப்பு கூறுகிறது. இதனையடுத்து, இது சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு முன்பு கூறியிருந்த பிரதமர், அந்த விசாரணைகளை நிறுத்துமாறு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது,



## மாலைதீவின்

# நான்காவது கைதியும் நேற்று மரணமானார்

மாலைதீவு சிறைச்சாலையிலிருந்து கொண்டுவரப்பட்ட கைதிகளில், நான்காவது நபரும் நேற்று மரணமடைந்துள்ளார்.

மாலைதீவு சிறைச்சாலையில் கைதிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையே இடம்பெற்ற மோதலில், காயமடைந்த கைதிகள் - இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட கைதிகள் அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில், கடந்த வியாழக்கிழமை முதலாவது கைதி இறந்தது குறிப்பிடத்தக்கது.

மற்றும் இருவர் கடந்த வெள்ளிக்கிழமை இறந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

நேற்றையதினம் நான்காமவரும் சிறையில் இறந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. (01)

### ஈராக்கில் பணிபுரியவென

# பதினையாயிரம் படை வீரர்களை அமெரிக்கா அனுப்புவதற்கு முயற்சி

ஈராக்கில் பணிபுரிவதற்கென, உலக நாடுகளிடமிருந்து சமாதானப் படைகளை சேர்த்துக்கொள்ளும், அமெரிக்க ஜனாதிபதியின் முயற்சிக்கு பல நாடுகள் ஆதரவு வழங்க மறுத்துள்ளன. இதனால் 15,000 படைகளை அமெரிக்காவிலிருந்து அனுப்வுதற்கான முயற்சிகளை அமெரிக்க அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதனிடையே ஈராக்கிலுள்ள அமெரிக்கப்படையினர் தொடர்ந்து கொல்லப்படுவதால், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மன அழுத்தத்தைக் குறைப்பதற்காக 15 நாட்கள் விடுமுறையில் அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதன்படி முதற்கட்டமாக 200 போர்வீரர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் அமெரிக்க இராணுவ சிப்பாய்களாகக் கடமையாற்றுபவர்களாவர். தேவையேற்படின் இவர்கள் ஈராக்கில் கடமையில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது ஈராக்கில் பிரிட்டன், போலந்து ஆகிய நாடுகளின் தலைமையில் சமாதானப்படையினர் கடமையாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.






தென் கொரியத் துருப்புக்களை ஈராக்கில் பணியில் அமர்த்துவதற்கெதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சிறுவன் ஒருவன் சுலோக அட்டையை தாங்கி எதிர்ப்புத் தெரிவிப்பதைப் படத்தில் காணலாம்.

# அமெரிக்கப் படையினரின் தாக்குதலில் இரு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்!



வெள்ளி இரவன்று, அமெரிக்க இராணுவக் காவலரன் ஒன்றில் நிறுத்தாமல் சென்றகார் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் இரண்டு ஈராக்கியர் பலுஜா நகரில் கொல்லப்பட்டார்கள் என, கூட்டுப் படையினர் அறிவித்துள்ளனர்.

ஆனால், நேரில் இந்தச் சம்பவத்தைப் பார்த்த ஈராக்கியர்கள் தெரிவிக்கும் போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை நான்கு எனவும், இதில் இருவர் பெணகள் எனவும் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தை அறிந்த ஈராக்கியர்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அமெரிக்காவிற்கு எதிராக நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கியூபாவுடன் பல ஒப்பந்தங்கள் பிரேஸில் கைச்சாத்திட்டுள்ளது



கியூபாவிற்கு விஜயம் செய்த பிரேசிலின் ஜனாதிபதி லூலா டீ சில்வர் கியூபாவுடன் பல அரசியல் அறிக்கைகளில் கையெழுத்திட்டுள்ளார்.

பிரேஸிலுடன் பல வர்த்தக உடன்படிக்கைகளில், அமெரிக்கா கையெழுத்திட்டிருப்பதால் கியூபாவுடனான வர்த்தக உறவுகளை நிதானமாகவே பிரேஸில் செய்துள்ளதாக பி.பி.ஸி. நிருபர் தலைநகர் கவானாவில் தெரிவித்தார்.

பிரேஸில் கியூபாவுடன் சிறிய வர்த்தக முதலீடுகளில் தற்போது ஈடுபட்டுள்ளது. இரு நாடுகளும் எண்ணை வள ஆய்வுகளை மெக்சிக்கோ குடாவில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

# ரஷ்ருல்லா கான் மரணம்

பாகிஸ்தானின் முதிர்ந்த அரசியல் ஞானியான நவாப் சாதா ரஸ்ருல்லா கான் தனது 85 ஆவது வயதில் நேற்றுக் காலமானார். இவர் அரை நூற்றாண்டு காலம் அரசியல் வாதியாக கடமையாற்றினார்.

ஏ.ஆர்.டி.எனப்படும் ஜனநாயகத்தை மீட்பதற்கான கட்சியின் மத்திய தலைவராக கடமைபுரிந்த இவர் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சியில் இருந்து போராடி வந்துள்ளார். 1960 இல் தனது சொந்தக் கட்சியான அவாமி லீககின் தலைவரானார்.

# அமெரிக்க, ரஷ்யத் தலைவர்கள் பேச்சுக்ளை நடத்தியுள்ளனர்!

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் - ரஷ்ய ஜனாதிபதி புட்டினும் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். ஈராக்கை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பாகவும், ஈரானின் அணு உலைகள் தொடர்பாகவும், அவர்கள் பேச்சுக்களில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

ஈரானின் அணுசக்தி திட்டத்திற்கு ரஷ்யா உதவக்கூடாதென புஷ் புட்டினிடம் தெரிவித்ததாகவும்,

ஆனால், அதற்கு புட்டின் மறுப்பு தெரிவித்ததாகவும், கூறப்படுகிறது.

ஈரானில் அணு உலைகளை அமைப்பதில் மேற்குநாடுகள் துணைபுரிவதற்கான ஆதாரங்கள் இருப்பதாக புட்டின் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கில் சர்வதேச படைகளை ஈராக்கில் பணியில் ஈடுபடுத்தும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கு, ரஷ்யாவின் உதவியையும் புஷ் கோரியுள்ளதாகவும்- ஆனால், அதற்கு புட்டின் எந்தவிதமான கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

## உலக நோக்கு

# பங்களாதேஷில் வேலை நிறுத்தங்கள்: பெரிதும் வர்த்தக செயற்பாடுகள் பாதிப்பு

பங்களாதேஷின் எதிர்க்கட்சியான சுவாமிலிக்கினால் பரந்த அளவில் நடத்தப்படும் வேலை நிறுத்தத்தால் வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

பங்களாதேஷில் அதிகரித்துவரும் பொருட்களின் விலையும், எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறைகளுமே அதிகாலையில் இருந்து மாலை வரையிலான வேலை நிறுத்தத்திற்கு காரணம் என, வேலைநிறுத்தத்தை ஒழுங்கு செய்தவர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

வெள்ளியன்று குல்னா நகரின் தென்மேற்கு பகுதியில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் எதிர்க்கட்சியான சுவாமி லீக் கட்சிகளின் அங்கத்தவர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். இதனிடையே எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் பொலிஸாருடன் மோதிக் கொண்டதுடன், சில வண்டிகளுக்கும் தீ வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினர் தமது வலிமையை வெளிப்படுத்துவதற்கு இந்த வேலை நிறுத்தங்களை ஒரு கருவியாக பாவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், எதிர்க்கட்சியின் தோல்விக்குப் பின் தற்போது இந்த வேலை நிறுத்தத்தின் மூலம் மக்களிடம் செல்வாக்குப் பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக் ஆக்கிரமிப்புக்கு எதிராக பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டம்

ஈராக்கில் பிரிட்டன் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் 150 வாகனங்களில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆதரவாளர்களைத் திரட்டுவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை - ஹெலியின் மரணம் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் கற்றன் ஆணைக்குழு ஈராக்கில் பேரழிவு தரக்கூடிய ஆயுதங்கள் உண்டு என்ற பொய்யான தகவலை மக்களிடம் தெரிவிததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்குசெய்யப்பட்டதாக, அதன் அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.



இந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்காணிப்பதற்கு 2700 மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஈராக்கின் மீது பிரிட்டன் போர் தொடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த வருடம் நடைபெறும் ஐந்தாவது ஆர்ப்பாட்டமாக இது கருதப்படுகிறது. இதில் பிரித்தானியாவில் உள்ள முஸ்லிம்களும், அணுவாயுதங்களைக் தடைசெய்யக்கோரும் அமைப்புக்களும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஊர்சுற்றி எழுதுவது

சமாதானம் பற்றி எல்லோருமே பேசுகிறார்கள். இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்வுகாணப்படவேண்டுமென்று, சந்திரிகா அம்மையார் கடந்தசில தினங்களில் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளிலெல்லாம் உரத்துக் குரல் கொடுத்திருக்கிறார்.

திருகோணமலையைத் தாக்கி, பலாலி படைத் தளத்தையும் செயற்படாமல் செய்யக்கூடியதாக புலிகள் ஆயத்த நிலையிலிருக்கிறார்களென்று கதிர்காமர் அடியெடுத்துக் கொடுக்க, ஓலமிட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி இப்பொழுது பேச்சுவார்த்தையை வலியுறுத்தத் தொடங்கியிருக்கிறார் கவனித்தீர்களா என்று, எனது நண்பர் கேட்டார்.

திருகோணமலைக்கு மட்டுமல்ல, விடுதலைப் புலிகளால் இந்தியாவுக்கும் ஆபத்து என்று அவலக் குரல் எழுப்பிய கதிர்காமர் - டில்லிக்குப் போய் வந்தார். கதிர்காமர் சந்திரிகா மூலம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக டில்லி ஏதாவது செய்யுமென்று இவர்கள் எதிர்பார்த்தார்களோ என்னவோ! என்றேன் நான்.

ஆனால், இந்த ஆபத்துக்களெல்லாம் பற்றி அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் மட்டுமல்ல மற்றும் அயல்நாடுகளுடனும் பேசி ஆயத்தமாக்கி வைத்திருக்கிறேன் என்ற சாரப்பட, சந்திரிகா அம்மையாரின் கடிதத்துக்கு, மறுப்புக் கொடுத்த ரணில் சொல்லியிருந்தார் - அம்மையாருக்கு சப்பென்று போயிருக்கும் என்றார் நண்பர்.

இதுவும் சந்திரிகா அம்மையாரின் வீரப்பேச்சுக்களை சுருக்கி, பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணவேண்டிய அவசியத்தை சொல்லவைத்திருக்கிறதோ, என்றேன் நான்.

போர்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப் படமுடியாதென்பதை, இப்பொழுது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி சந்திரிகா நன்குணர்ந்து விட்டதாகத் தோன்றுகிறது என்றார் நண்பர்.

ஆயுதப்படைகளுக்கு ஆட்திரட்டும் முயற்சிகளிலும், தேசபக்த இளைஞர்கள் திரண்டு வருவதாகத் தெரியவில்லை. பேச்சுவார்த்தை மூலம், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணலாமென்று சொல்லி, சமாதானப் பேச்சுக்களையும் ஆரம்பித்து உலக நாடுகளின் ஆதரவையும் பெற்றுகொண்டுவரும் ரணில் விக்கிரம சிங்கவை பேச்சுவார்த்தை என்று சொல்லித்தான் மடக்கலாம் என்று, அம்மையார் நினைக்கிறாரோ என்றேன்.

புலிகள் போருக்கு ஆயத்தப்படுத்துகிறார்கள், தாக்கப்போகிறார்கள், கொழும்பில் தற்கொலைக் குண்டுத்தாரிகள் பலர் வந்து காத்திருக்கிறார்கள், திருகோணமலைக்கு ஆபத்து, இந்தியாவுக்கு ஆபத்து என்று எப்படியெப்படியெல்லாமோ அபயக் குரல் எழுப்பினாலும் - மக்கள் மத்தியில் ஆவேசம் தோன்றுவதாகக் காணோம். இதனாலும், சந்திரிகா அம்மையார் சலிப்படைந்து, சமாதானத்தை பேச்சு வார்த்தை மூலம்தான் காணவேண்டுமென்று பேசத் தொடங்கி விட்டாரோ?

பிக்கு முன்னணி என்பது, இளம்பிக்குமார் கூடி நிபந்தனைகளுடன் பெரிய மகாநாயக்கர்களுக்கு, ஒருமாதகால அவகாசம் கொடுத்து அரசுக்கும் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

பிக்குகள் உண்ணாவிரதம் என்று மிரட்டுகின்றனர். இதேநேரம், சிஹல உறுமயவின் எச்சரிக்கைகள் மறுபுறம். ஜே.வி.பி புதிதாக கண்டியிலிருந்து மற்றொரு பாதயாத்திரை!

சந்திரிகா அம்மையாரின் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும், சிஹல உறுமயவும் மற்றும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியுள்ளவர்களும், ரணில் ஆட்சியை வீழத்துவதே நோக்கமாகக் கொணடு செயல்படுகின்றனர் என்று, நண்பர் தொடர்ந்தார்.

ஆட்சியைக் கவிழ்த்துவிட்டால், அடுத்து விடுதலைப் புலிகள் என்ன செய்வார்களோ என்ற பயம் அம்மையாருக்கு ஏற்பட்டுவிட்டதோ என்றேன்.

உண்மைதான். அதனால்தான், யார் ஆட்சிக்கு வந்தாலும் விடுதலைப் புலிகளுடன் பேசசுவார்த்தையைத் தொடர்ந்து நடத்தி, இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்றும் அம்மையார் சொல்கிறார்.

அதிகாரப் பரவலாக்கல்தான் தீர்வு. அது 2000 ஆம் ஆண்டில் அம்மையார் சொன்ன திட்டத்தின் அடிப்படையில்தானாம்.

அதிகாரப் பரவலாக்கல் அல்ல அம்மாவின் திட்டம். ஜனாதிபதி பதவிக்காலம் முடிந்ததும் மீண்டும் அம்மா அப்பதவிக்குப் போட்டியிடமுடியாது. புதிதாக அரசியலமைப்பில் மாற்றம் செய்து அதிகாரமுள்ள பிரதம மந்திரி பதவியைப் பெறுவதே அவரது அதிகாரப்பரவலாக்கல் திட்டம் என்றார் நண்பர்.

அதுசரி ரணில் அரசும், சந்திரிகாவின் முன்னணியும் சமாதானம்தான் தங்கள் இலக்கென்று சொல்கின்றனர். பின்னர் வடக்கு - கிழக்கில் மூலைமுடுக்குகளிலெல்லாம் - இராணுவமுகாம்களும், இராணுவத்தினரும் ஆயுதம் ஏந்திக்கொண்டு திரிகின்றனர். இவற்றை முடக்கி வைத்துவிட்டுப் பேசலாமே! என்றேன். யார் காதில் விழப்போகிறது?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நெற்செய்கையில் ஈடுபடுவதில்லையென சம்மாந்துறை விவசாயிகள் தீர்மானம்!

அரசு நெற்கொள்வனவில் காட்டும் அசமந்தப் போக்கின் காரணமாக, சம்மாந்துறைப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்கள் 2003/2004 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கையினை மேற்கொள்வதில்லையென தீர்மானித்துள்ளனர்.

தற்போது அரசினால் 13.50 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் நெல்லின் உத்தரவாத விலையை, 15 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர். அத்துடன், யுத்தகாலத்தில் பசளைகளுக்கான மானியங்களை வழங்கிய அரசு, தற்போதைய சமாதான காலத்தில் மானியங்களை நிறுத்தியதுடன்- பசளை, கிருமிநாசினிகளின் விலைகளையும் கூட்டியுள்ளது. இதனால், உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது.

ஆனால், அரசு நெல்லினை உரிய முறையில் கொள்வனவு செய்யவில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்துடன் - மின்கட்டணங்கள், தண்ணீருக்கான கட்டணம் என்பவற்றுக்குப் பணத்தைச் செலுத்தாமல், வீடுகளில் தேங்கியுள்ள நெல்லினைக் கொண்டு சென்று கொடுக்கப் போவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

## நாற்சந்தி



நேற்றுமுன்தினம் திலீபநாளன்று அந்தப் பகுதியில் அந்த தியாகசீலனின் நினைவாக பலர் உண்ணாநோன்பில் ஈடுபட்டிருந்தனர்.

பன்னிரு நாட்கள் தனது மக்களினதும், மண்ணினதும் விடுதலைக்காகவும், உரிமைகளுக்காகவும் உண்ணாநோன்பிருந்து தமிழ்மக்களின் விடியலுக்காக தன்னையே மெழுகுதிரியாக்கிக் கொண்ட திலீபனின் நினைவுநாளில் எல்லா இடமும் அமைதியில் மௌனித்திருந்தது.

அந்த உண்ணாவிரதிகள் தமது நோன்பை அனுஷ்டித்துக் கொண்டிருந்த பகுதிக்கு அப்பால் சுற்றிலும் கடலை வியாபாரிகளும், ஓரிரு குளிர்பான வியாபாரிகளும் தமது கடையைப் பரப்பியிருந்தனர்.

அங்கு வருகைதந்திருந்த சிலர் கடலை வாங்கிச் சாப்பிடுவதும், ஐஸ்கிறீம் குடிப்பதுமாக பம்பலடித்துக் கொண்டிருந்த காட்சி சகிக்கமுடியாத ஒன்றாக இருந்தது.

வர்த்தகர்களுக்கும் சரி, 'பம்பல்' அடிக்கும் கும்பலுக்கும் சரி இடம், காலம், சூழல் பற்றிய சிந்தனையே இல்லாதிருப்பது அவமானமாக இருக்கிறது.

நம்மவர்களில் சிலருக்கு தேசப்பற்றும், இனவுணர்வும் எத்தனை சொன்னாலும் ஏறாமலே இருப்பதுதான் வருத்தத்திற்குரிய விடயம்.

'எல்லாமே கற்றுவரும் விடயமல்ல. பல உணர்ந்து வரக்கூடிய விடயங்களே...' என்கிறார் ஒரு பெரியவர்.

-தெருவாசி

## கடற்படைச்சிப்பாய் தப்பியோட்டம்

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் தடுப்புக்காவலில் இருந்ததாகக் கூறப்படும் கடற்படைச் சிப்பாய் ஒருவர், நேற்று அதிகாலை 5.30 மணிக்கு தப்பிச் சென்றுள்ளார்.

ஐ.என்.ஜி.ஏகே தர்மதாஸ் என்ற கடற்படைச் சிப்பாயே இவ்வாறு தப்பிச் சென்றவராவார். இவர் விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலிலிருந்து தப்பி, மூதூரிலுள்ள கடற்படை முகாமுக்குச் சென்றுள்ளார்.

திருகோணமலை கடற்படைத் தளவைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சையின் பொருட்டு, அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (04)

## ஜனாதிபதியை கொல்வதற்கு பெண்போராளி காத்திருந்தாராம்

### அநுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியைப் படுகொலை செய்வதற்கு, விடுதலைப் புலிகளின் பெண் போராளி ஒருவர் காத்திருந்ததால், அவர் தந்தையாரின் சிராத்த தின நிகழ்வில் கலந்துகொள்ளவில்லையென, ஜனாதிபதியின் சகோதரரான அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

நேற்று கேகாலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, அநுரா பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

சொக்கல்ல என்ற கிராமத்தில், ஜனாதிபதியின் தந்தையாரான எஸ். டபிள்யூ ஆர்.டீ. பண்டாரநாயக்கவின் சிராத்ததின நிகழ்வு நடைபெற்றது. இதில் கலந்துகொள்வதற்கு ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்துகொள்வதாக விடுதலைப் புலிகளுக்குத் தகவல் கிடைத்தது. இதனால், விடுதலைப் புலிகள் ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கு - நிட்டம்புவ என்ற இடத்தில், பெண் போராளி ஒருவர், முஸ்லிம் பெண்போல நின்று - ஜனாதிபதியைக் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாக, ஜனாதிபதிக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து, அவர் அந்த நிகழ்வில் கலந்துகொள்வதை இறுதி நேரத்தில் இடைநிறுத்தியதாக, அநுரா மேலும் தெரிவித்தார். (01)

## கருத்தரங்கு இடம்மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் இலவசக் கருத்தரங்கு நடைபெறும் இடம் மாற்றப்பட்டுள்ளது. நாளை யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலத்தில் காலை 10 மணி முதல் 5 மணிவரை நடைபெறவிருந்த, இந்தக் கருத்தரங்கு புனித பற்றிக் கல்லூரிக்கு, அதேநேர அட்டவணையுடன் மாற்றப்பட்டுள்ளது.

## சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் நூல் கிளிநொச்சியில் வெளியீடு

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில், எதிர்வரும் முதலாம் திகதி விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவினர் - 'நெருப்பாற்று நீச்சலில் பத்து ஆண்டுகள்' எனும் தமது படைப்பிரிவின் வரலாறுகளை உள்ளடக்கிய புத்தகத்தினை வெளியிடவுள்ளனர்.

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் களமுனைத் தளபதிகளில் ஒருவரான காண்டீபன் மாஸ்ரர் தலைமையில் - மாலை 3 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் ஆசிச்செய்தியுடன், இந்தப் புத்தகத்தில் - சாள்ஸ் அன்ரனி பற்றிய வரலாறு, இந்தப் படைப் பிரிவினரின் கடந்த 10 ஆண்டுகால தாக்குதல் விபரங்கள், இந்தப் படையணியிலிருந்து மாவீரரான 5 தளபதிகளின் வரலாறு மற்றும் படையணியிலிருந்து வீரச்சாவடைந்த கரும்புலிகள், மாவீரர்கள் பற்றிய விபரங்களும் அடங்கியுள்ளன. (03)

## திருமலையிலிருந்து 'கோணமாருதம்' மாதாந்த பத்திரிகை வெளிவந்துள்ளது

(திருகோணமலை)

திருகோணமலையிலிருந்து மாதாந்தம் வெளிவரும் 'கோணமாருதம்' பத்திரிகை நேற்று வெளிவந்துள்ளது.

நேற்று மாலை ஐந்து மணிக்கு, திருமலை நகரசபை மண்டபத்தில் இந்த வெளியீட்டு விழா இடம்பெற்றது.

வல்வை அ.ஆனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வில் - திருகோணமலை மாவட்ட மகளிர் படையணித் தளபதி தயாளினி - பத்திரிகையை வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பெற்றுக் கொண்டார்.

இந்தப் பத்திரிகையின் அறிமுகவுரையை வேலவனும், மதிப்பீட்டுரையை ஸ்ரீதேவியும், விமர்சன உரையை கவிஞர் வில்வரத்தினமும் ஆற்றினர். (04)

## நெல் கொள்வனவு...

எனவே, மேற்படி நடைமுறைகளுக்கமைய நெல்லினைக் கொள்வனவு செய்யுமாறு, வருவாய்ப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

## வவுனியா....

இந்த இளைஞரின் மரணம் குறித்த விசாரணையை, வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் நேற்று மாலை மேற்கொண்டார்.

தற்போது இந்தச் சடலம் அடையாளம் காண்பதற்காக வவுனியா ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (03)

## மன்னாரின்...

எடுக்கப்பட்டது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து படையினர் வெளியேறி, மக்களை மீள்குடியமர்த்த வேண்டும். விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை ஒப்படைக்கவேண்டும் என்ற, பல்வேறு விடயங்களை வலியுறுத்தி - இந்த பொங்குதமிழ் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக, அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (01,201)

## சுத்திகரிப்பில்...

தொழிலாளர்கள் சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். தடைப்பட்டிருந்த குழாயை அடைத்திருந்த கழிவுப்பொருட்களை அகற்றிக் கொண்டிருந்தவேளை - திடீரென தடை நீங்கியதால், வேகமாக வந்த நீரினால் தூக்கிவீசப்பட்டு கழிவுத் தொட்டிக்குள் வீழ்ந்த அற்புதன் மரணமடைந்தார்.

அற்புதன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவேளை, அவரைக் காப்பாற்ற முற்பட்ட மற்றைய இருவரும் காயமடைந்ததுடன் மயக்கமடைந்தனர். இவர்களில் மெண்டீஸ் சுமன் ஆபத்தான நிலையில் - அதி தீவிர சிகிசிசைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தையடுத்து, இவர்களின் உறவினர்கள் வைத்தியசாலையில் கூடியிருந்தனர்.

இவர்களைப் பணிக்கு அமர்த்திய ஒப்பந்தகாரர், வைத்தியசாலைக்குச் சென்று - பணிப்பாளருடன் உரையாடிக்கொண்டிருந்தவேளை, இளைஞர்கள் சிலரால் பணிப்பாளர் அலுவலகக் கண்ணாடிகள் அடித்து நொருக்கினர்.

இதனையடுத்து, வைத்தியசாலைக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

இறந்தவர்களது சடலம் - யாழ். நீதிவான் இ.த.விக்னராஜாவின் மரண விசாரணையையடுத்து, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (111, 202)

## விடுதலைப் புலிகளின்...

பட்ட உள்ளூர் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும், போர்நிறுத்த கண்காணிப்புக்குழு சார்பில் தலைவர் ட்றிகேவ் ரெலவ்சன் தலைமையிலான குழுவினரும் இந்தச் சந்திப்பில் பங்குபற்றவுள்ளனர்.

இந்த சந்திப்பு தொடர்பான ஒழுங்குபடுத்தலை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப்பணிப்பாளர் புலித்தேவனும், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த பவானந்தனும் மேற்கொண்டுள்ளனர்.

இரு தரப்பினருக்குமிடையேயான தொடர்புகளை - மேலும் வலுப்படுத்தும் முகமாகவே, இந்தச் சந்திப்பு அமையவிருப்பதாகத் தெரி விக்கப் படுகிறது.


## சிங்கள வகுப்பு

வழிகாட்டல் ஆசிரியர்:-திரு.மல்வான

★ காலம்:- 3 முதல் 5 மாதங்கள்
★ அரசநிர்வாகிகள்,பல்கலைமாணவர்கள், தனியார்துறையினருக்கான பேச்சு சிங்கள வகுப்பு இப்போது நடைபெறுகிறது.
★ A/L மாணவர்களுக்கான அறிமுகவகுப்புகள்
★ 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான சிங்களம்

இன்று முதல் இணைந்து கொள்ளலாம்

விவரங்களுக்கு:-
திரு.மல்வான
56,அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி-1608)


## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி அருணாசலம்

கீரிமலையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட பரமேஸ்வரி அருணாசலம் அவர்கள் 27.09.2003 ஆம் திகதி நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் ஆசிரியர் அருணாசலத்தின் மனைவியும், சியாமளா, இரவி (இலண்டன்) ஆகியோரின் தாயாரும், பத்மசிகாமணி, சுசீலா ஆகியோரின் மாமியாரும், பாபு (கனடா), கோபி, ரதீப், சஞ்சயன், சஞ்சுரன், ஆர்த்தி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மகிந்த மலர்ச்சாலை, கல்கிசையில் இன்று (28.09.2003) மதியம் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- அ.இரவி.
தொலைபேசி இல: 012605201.

(சி-1609)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 25.01.1936
இறைவனடியில் 09.10.2002

திருமதி
### சிவபாக்கியம் குமாரசாமி
(குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்)
28.09.2003

அன்புத்தாயே எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்று ஓராண்டு கடந்துவிட்டாலும் உங்கள் நினைவுகள் எம் இதயங்களில் என்றும் வாழும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

352, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்
01 -222 -2555 (491)

கணவன்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.